யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 29 புதன்கிழமை (15-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 303

# கனகராயன்குளத்துக்கு அப்பால்
# மும்முனைகளில் புலிகள் தாக்குதல்!

## சண்டை தொடர்கின்றது

**வவுனியா, ஒக்ரோபர் 15**

**வன்னியில் "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினர் மீது கனகராயன்குளத்துக்கு வடமேற்கே உள்ள பிரதேசத்தில் வைத்து மூன்று முனைகளில் நேற்று முன் தினம் இரவு முதல் புலிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.**

**இத்தாக்குதல் நேற்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்ததாக வவுனியாவுக்கு நேற்றிரவு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.**

புலிகளின் தாக்குதலை தாங்கள் வெற்றிகரமாக முறியடித்த பின்னர், அங்கு புலிகளைத் தேடி அழிக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாகப் படைத் தரப்பில் அறிவிக்கப் பட்டது.

இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதம் குறித்து புலிகள் தரப்பு அறிவிப்பு ஏதும் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

கடும் சண்டையின் பின்னர் படையினர் நடத்திய தேடுதலின் போது இருபது யுவதிகளினதும் மிக இளவயதுடைய 16 சிறுவர்களினதும் சடலங்கள் உட்பட 47 புலிகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக படை வட்டாரங்கள் அறிவித்தன.

ரி 56 ரகத் துப்பாக்கிகள் — 64, இயந்திரத் துப்பாக்கிகள் — 9, ஆர். பி. ஜி. ரகத் துப்பாக்கிகள் — 3 மற்றும் ஒரு லட்சம் துப்பாக்கி ரவைகள் படையினரால் கண்டெடுக்கப்பட்டதாகவும் படைத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இச்சண்டையில் ஏழு படையினர் உயிரிழந்ததாகவும் —

23 படையினர் காயமடைந்ததாகவும்—

படைத் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் பின்னர் 11 புலிகளின் சடலங்கள் படையினரால் கைப்பற்றப் பட்டதாக சுயாதீன வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

(உ-3-21-9)

## மட்டக்களப்பில் உண்ணாவிரதம்

மட்டக்களப்பு, ஒக். 15

சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையைக் கண்டித்து மட்டக்களப்பு காந்தி சிலை அருகே நேற்றுக் காலை எட்டு மணி முதல் மாலை 4 மணி வரை அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.,

நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி நடத்த ஈ. பி. ஆர். எல்.எப். அமைப்பு அனுமதி கோரியபோது, பொலீஸாரால் அதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. அதை அடுத்து நேற்று, உண்ணாவிரத நிகழ்வை அந்த அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

இந்த உண்ணாவிரதத்தில் 75 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு பிரதி மேயர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுநகர் மீது புலிகள் ஷெல் தாக்குதல்!

### 14 படையினர் காயம்!!

மட்டக்களப்பு, ஒக். 15

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள 3 ஆவது படைப்பிரிவு தலைமையகம், விமானப்படை முகாம் ஆகியவற்றின் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 7.30 க்கு மோட்டார் தாக்குதலை மேற்கொண்டனர்.

வாவிக்கு அப்பால் கன்னங்குடா, வவுணதீவு ஆகிய இடங்களில் இருந்து 10 முதல் 15 வரையான மோட்டார் ஷெல்களை விடுதலைப் புலிகள் ஏவினர்.

இந்த தாக்குதலில் 14 படையினர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

3 ஆம் படைப்பிரிவு தலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்குச் செல்ல பொலீஸார் பின்னடிப்பு!

மட்டக்களப்பு, ஒக். 15

மட்டக்களப்பு பொலீஸ் நிலையங்களில் இருந்து, வன்னியில் "வெற்றி உறுதி" இராணுவ நடவடிக்கையின் போது படையினர் கைப்பற்றிய பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட பொலீஸாரில் ஒரு பகுதியினர், ஆயுதங்களை பொலீஸ் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டு கடமைக்கு செல்ல மறுத்துள்ளனர்.

மட்டக்களப்பில் பணிபுரியும் 2 பிளாட்டூன்களையும், வாழைச் சேனையில் பணிபுரியும் இரு பிளாட்டூன்களையும், ஏறாவூரில் பணிபுரியும் ஒரு பிளாட்டூனையும் சேர்ந்த 100 பொலீஸாரே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் [illegible]

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுசுட்டானில் 7 பொதுமக்கள் உயிரிழப்பு!

வவுனியா, ஒக். 15

நேற்று முன்தினம் ஒட்டுசுட்டான் பேராறுப் பகுதியில் இடம்பெற்ற விமானக்குண்டு வீச்சில் ஏழு பொதுமக்கள் உயிரிழந்ததாக "புலிகளின் குரல்" நேற்று தெரிவித்தது.

உயிரிழந்தவர்களின் பெயர்களும், ஏனைய சேதங்கள் குறித்த விவரங்களும் தெரிய வரவில்லை. (உ-3)

## வவுனியாவில் 2 படையினர் பலி!

வவுனியா நொச்சிமோட்டைப் பகுதியில் நேற்றுக் காலை புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் இரு படையினர் உயிரிழந்தனர்.

அதே நேரம் ஓமந்தைப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற அமுக்க வெடிச் [illegible] பொலிஸ் [illegible] காயமடைந்தார். (உ-21-3)

## சர்வஜன வாக்கெடுப்புக்கு ஜே. வி. பியும் எதிர்ப்பு!

கொழும்பு, ஒக். 15

"கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவது என்று அரசாங்கம் முன்வைத்துள்ள யோசனை ஒரு பிரயோசனமற்ற செயல்" — என்று மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.

இவ்வாறான சர்வஜன வாக்கெடுப்பு மக்களுக்கிடையே மேலும் பிரிவினையை உண்டு பண்ணும் என்று கொழும்பில் நேற்று நடந்த கூட்டத்தில் உரையாற்றிய ஜே. வி. பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் குறைந்தளவு மக்களே வாழ்கின்றனர். பெரும்பாலான மக்கள் அகதி முகாம்களிலும் மற்றும் சிலர் இந்தியாவிலும் தஞ்சமடைந்துள்ளனர். ஆகவே அங்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது பொருத்தமற்ற செயலாகும் என்றார். (உ-3)

## அரசமைப்புத் திருத்தம்; 21 இல் நாடாளுமன்றுக்கு!

அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான உத்தேச அரசமைப்புப் பிரேரணை அறிக்கை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (21ஆம்திகதி) நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் என்று நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்

உத்தேச அரசமைப்பு பிரேரணைகள் நேற்று நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்களுக்கு கையளிக்கப் பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் சமர்பித்த பல பிரேரணைகளும் உள்ளடக்கியதாக இந்த அறிக்கை அமைந்துள்ளது என்றும் —

இந்த அறிக்கையில் செய்யப்படவேண்டிய மாற்றங்குறித்துக் கலந்துரையாடலாம் என்றும் —

அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்தார். (உ-3)

### ஈ.பி.ஆர்.எல்.எவ். ஏற்பாட்டில்

## வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

வவுனியா, ஒக். 15

சிங்கள ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையை வாபஸ் பெறுமாறு கோரி நேற்று வவுனியாவில் ஆர்ப்பாட்டப் பேரணியும், கண்டனக் கூட்டமும் நடைபெற்றன.

நேற்றுக்காலை சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடியில். இருந்து வான், லொறிகள், ஓட்டோ, பஸ்கள் ஆகியவற்றில் சுமார் 2 ஆயிரம் பேர் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி பேரணியாகப் புறப்பட்டனர்.

கண்டி வீதி, பஸார் பெற்றோல் நிலையச் சந்தி ஊடாகச் சென்ற இந்தப் பேரணியினர் கோஷங்களை எழுப்பினர்.

"இலங்கை சிங்கள–பௌத்த நாடு என்ற சிங்கள ஆணைக் குழுவின் கூற்றை முற்றாக நிராகரிப்போம்"

"சிங்கள இனவாதத்துக்கு எண்ணெய் ஊற்றும் சிங்கள ஆணைக்குழு அறிக்கையை உடனே வாபஸ் பெறு!"

(10 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் நேற்று கிரனேட் வெடிப்பு!

### மூவர் படுகாயமுற்றனர்!!

யாழ்ப்பாணம், ஒக்.15

யாழ்ப்பாணம் பஸ்நிலையப்பகுதியில் — வைரவர் கோயில் அருகில் உள்ள மண்ணெண்ணெய்க் கடைகளுக்கு முன்பாக — நேற்று இடம்பெற்ற கிரனேட்குண்டு வெடிப்புச்சம்பவத்தின்போது இராணுவச் சிப்பாய் ஒருவர் உட்பட மூவர் படுகாயம் அடைந்தனர்.

இராணுவச் சிப்பபாயான விஜிதகுமார (வயது 28),

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்வேலி
### அருள்மிகு
### ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் தேவஸ்தானம்
பிரதம சிவாச்சாரியாரின்
## பீமரத சாந்தி விழா

எமது ஆலய பிரதம குரு
சதா சாதக்கிரியாமணி
### ஸ்ரீமத் கார்த்திகேய சாம்பசதாசிவக் குருக்கள்

அவர்களின் எழுபது ஆண்டு வாழ்க்கைப் பூர்த்தி தொடர்பாக இன்று 15-10-1997 மேற்படி ஆலயத்தில் நிகழவிருக்கும் விழாச் சிறப்புறவும், குருக்கள் அவர்கள் பூரணப் பொழிவுடன் பல்லாண்டு வாழவும், அவர் தம்பணி தொடரவும், பிரார்த்தித்து, வாழ்த்தி வணங்குகின்றோம்.

அறங்காவல் சபையினரும்
வழிபடுவோரும்

நீர்வேலி.
15.10-1997
(50555)

## உடுவில் மகளிர் கல்லூரி

மறைந்த எமது முன்னாள் பேராயரின் இறுதி யாத்திரையில் அஞ்சலி செலுத்துமுகமாக எமது மாணவர்கள் அனைவரையும் புதன்கிழமை (15-10-1997) காலை 11-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கூடுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

அதிபர்:
உடுவில் மகளிர் கல்லூரி.
(சி/1782)

## G. A. Q. 98/99
### (பேராதனை)

- ★ மேற்கூறப்பட்ட கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- ★ A/L இல் (கலை, வர்த்தகம், விஞ்ஞானம்) 180 புள்ளிகளுக்கு குறையாமல் பெற்றுக் கொண்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.
- ★ பல்கலைக்கழகப் பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்.

**விரிவுரைகள் ஆரம்பம்:**
**18-10-97 காலை 9 மணி**

விவரங்களுக்கு: **S. அருள்நங்கை**

### புதிய உயர் கல்லூரி
**ஆரியகுளம் சந்தி - யாழ்.**

(49816)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

### அமரர் ஆறுமுகம் இராசதுரை
(ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர், கொழும்பு)

மண்ணில்: **19 — 05 — 1932**
விண்ணில்: **15 — 10 — 1995**

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காய் ஒளி வீசி; நல்வழிகாட்டி எங்களை வாழவைத்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவலைகள் என்றும் எங்களை விட்டு அகலாது! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆறுமுகம்
கிருஸ்ணமூர்த்தி
(குடும்பத்தினர்)

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்.
(50541)

## கண்ணீர் அஞ்சலி

சத்திரசிகிச்சை நிபுணர்
**A. தயாளன்** அவர்களின்
தந்தையார்
### அதிவண. D. J அம்பலவாணர்
(முன்னாள் பேராயர்)

அவர்களின் மறைவினால் வருந்தும் அன்னாரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

சத்திர சிகிச்சைக்கள
டாக்டர்கள், தாதியர்கள்,
ஊழியர்கள்.
**யாழ். போதனா வைத்தியசாலை**
(சி/1780)

## பேராயரின் நல்லடக்க ஆராதனை

யாழ்ப்பாணம், ஒக். 15

காலஞ்சென்ற பேராயர் அதி வண. டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் இறுதி ஆராதனையும், நல்லடக்க ஆராதனையும் இன்று வட்டுக்கோட்டையிலும், உடுவிலிலும் நடைபெறுகின்றன.

பேராயரின் திருவுடல் இன்று காலை வட்டுக்கோட்டைக்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி ஆராதனை காலை 9-00 மணிக்கு வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை பேராலயத்தில் நடைபெறும்

அதன் பின்னர் திருவுடல் உடுவிலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நல்லடக்க ஆராதனை நடைபெறும்.

(இ)

## முண்டம் கரை ஒதுங்கியது

செம்பியன்பற்று, ஒக். 15

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் கடற்பகுதியில் கடந்த ஞாயிறு காலை 25 வயது மதிக்கத்தக்க இளம் பெண் ஒருவரின் முண்டம் கரை ஒதுங்கியது.

தலை துண்டாடப்பட்டும் ஒரு பக்க மார்பகம் வெட்டப்பட்டும் காணப்பட்டது. சடலத்தில் சிவப்பு நிற உள் அங்கியும் காணப்பட்டது.

கரை ஒதுங்கிய சடலம் சற்று நேரத்தில் பொருமி விட்டதால் நாகர் கோயில் குடாரப்பு மக்கள் பிற்பகலில் அதனை அப்பகுதியில் புதைத்தனர்.

(உ-36)

## பாதுகாவலர் சங்கக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 15

கைது செய்யப்பட்டு தகவல் தெரியாதோர் பாதுகாவலர் சங்கத்தின் பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

கைதாகித் தகவல் தெரியாதோரது பெற்றோர் மற்றும் உறவினர்கள் இக்கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

(இ-5)

## உரும்பிராய் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக். 15

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவும் தாபகர் நினைவு தினமும் இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ள இவ்விழாவுக்கு கல்லூரி அதிபர் மா. சண்முகரத்தினம் தலைமை வகிப்பார்.

யாழ். கல்வி வலையம் 2 இன் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா பிரதம விருந்தினராகவும் கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஆ. இராசேந்திரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

[இ-9]

## B. A. (Final)
**யாழ். பல்கலைக் கழகம்**
விரிவுரைகள் ஆரம்பம்:
**18-10-97**
காலை **8-00** மணி
### புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி
யாழ்ப்பாணம்.
(49819)

## பக்தர் காயம்

அரியாலையில் மகாமாரி அம்மன் கோயிலில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மானம்பூ திருவிழாவின் போது மகுடாசுரன் போர் நிகழ்வில் சுவாமி சரிந்து ஒருவர் படுகாயமடைந்தார்.

அரியாலையைச் சேர்ந்த செல்லப்பா செல்வராசா (வயது 48) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-15)

## கண்ணீர் அஞ்சலி

அராலிச் சபையில் குருவாக மலர்ந்து,
ஆதீனத்தின் தூணாக நிமிர்ந்து எழுந்து இறையடி
சேர்ந்துள்ள நம் முன்னாள் பேராயர்
### அதிவண. கலாநிதி D. J அம்பலவாணர்

அவர்களுக்காக செபிப்பதுடன், துயருறும் அனைவருக்கும் எம் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றோம்.

போதகரும், விசுவாசிகளும்,
**அராலி திருச்சபை.**
(சி/1779)

## இதய அஞ்சலி
### பெரியதம்பி கந்தையா பாலசிங்கம்

எமது விஞ்ஞான பாடத்தின் தந்தையாகிய பெ. க. பாலசிங்கம் அவர்களின் இழப்பு ஈடுசெய்ய முடியாது. அவரின் இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை இதய அஞ்சலிகளாக சமர்ப்பிக்கின்றோம்.

சிற்றி ரெயிலர்ஸ்,
73, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(50564)

## பேராயர் D.J. அம்பலவாணர்
அவர்களுக்கு
## எமது கண்ணீர்ப் பூக்கள்

இறையருள் சேவை செய்ய
இளையாது சேவை செய்த
பாசமிகு பேராயர்
அளித்த சேவை நினைவில்
அழியுமோ?

ஆழ்கடல் மீதிலே
கொடும் புயல் நடுவிலே
அச்சமின்றி சேவை நோக்கோடு
பல கடல் தாண்டிப் பயணம் செய்து
மண்ணில் மழலைகள் வாடி விடாது
இங்கு வளர்க்க நிலையங்கள் நிறுவி
அயராது சென்று ஆசிகள் கூறி
மண்ணில் மழலைகள் சிறப்பான
வாழ்வு பெற வழி வகுத்த தியாகச் சின்னம் அவர்.

தன்னை நாடி வந்த மானிட உள்ளங்களை
மாண்போடு கண்ணுற்று அபயமளிப்பவர்
கொண்டு நடத்திடும் மேய்ப்பார்களைச் சந்தித்து
பற்பல ஆலோசனை புதுமையாய் அளிப்பவர்
தான் பெற்ற பணியதில் வழுவேதும் ஏற்படாது
நெஞ்சம் நிறை உறுதியுடன் சேவை செய்தவர்
சிந்தையதிலே இரக்கங்கள் கருணைகள்
எண்ணிலடங்கா தொகை தொகையானவை

ஆங்காங்கே வாழ்ந்து வந்த
மாணவச் செல்வங்களை
ஒரே கூட்டில் வாழ அழைத்து வந்தவர்
கருத்தோடும் கருணையோடும்
கண்காணித்து பிழை திருத்தி
சிறப்பான இளைஞர்கள் சமுதாயமதை
இரு கரங்களின் அரவணைப்பிலே
பூவில் உருவாக்கியவர்
நம் வாழ்விலே பெறுதற்கரிய
பேராயர் விண் சென்று விட்டாலும்
மண்ணிலே அவர் புகழ் பாடிட
மானிட நாவுகள் மறுக்குமோ?

மேனிதனைச் சுட்டெரிக்கும் கதிரொளியில்
படர்ந்திருக்கும் விருட்சம் போல்
பலருக்கு நிழலளித்த ஆயரை
இழந்து விட்டோம். துயராறுமோ?
உள்ள மலர் விரித்து
கண்களால் பன்னீர் தெளித்து
வாயார வாழ்த்தி
பிரிவுத் துயராறாது சொரிகிறோம்
துன்ப மழை உள்ளத்திலிருந்து விழிகளால்.

தகவல்:
நா, கமலாவதி
[சிறுவர் பராமரிப்பு நிலைய ஆசிரியையும்
இளையதம்பி இல்ல ஆசிரியையும்,
இணைந்து இளையதம்பி,
பிள்ளைகளும்.]

**உடுவில் மகளிர் கல்லூரி,**
உடுவில்,
சுன்னாகம்.
(சி/1783)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். விவசாயத் திட்டங்களுக்கு நோர்வேயும் பிரிட்டனும் உதவி

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு நோர்வே, பிரிட்டன் ஆகிய நாடுகளின் உதவியுடன் இரு விவசாயத்திட்டங்கள் அமுல் செய்யப்படுகின்றன.

ஐ. நா. உணவு, விவசாய நிறுவனத்தின் அனுசரணையுடன் மேற் கொள்ளப்படும் இவ்விரு திட்டங்கள் மூலம் 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட விவசாயிகள் நன்மை பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டது.

பிரிட்டிஷ் அரசாங்கம் வழங்கிய ஒருகோடி 80 லட்சம் ரூபா செலவில் 2 ஆயிரம் விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள், நீர்ப்பம்புகள், தெளிகருவிகள் சுழற்சி முறையில் வழங்கப்படவிருக்கின்றன.

நோர்வே அரசாங்கம் வழங்கியுள்ள ஒரு கோடி 12 லட்சம் ரூபா செலவில் 8 ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு மண்வெட்டிகளும், மரக்கறி விதைகளும் வழங்கப்படவிருக்கின்றன.

அத்துடன் 8 ஆயிரத்து 500 கூலித் தொழிலாளர்களுக்கும் மண்வெட்டிகள் வழங்கப்படவிருக்கின்றன.

திருநெல்வேலி விவசாயப் பயிற்சி நிலையமும் இந்த நிதியில் இருந்து புனரமைக்கப்படவிருக்கிறது.

உபகரணங்கள் மற்றும் ''பிக்கப்'' வாகனம், இரு மோட்டார் சைக்கிள்கள், ஜெனரேட்டர்கள் ஆகியனவும் இந்த நிதியில் இருந்து வழங்கப்படவிருக்கின்றன. (இ-3)

## சிறுவர் தின, முதியோர் வார கட்டுரை, ஓவியப் போட்டிகள்

### கோப்பாய் கோட்டத்தில் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 15

சர்வதேச சிறுவர்தினம் தொடர்பாக 11ஆம், 12ஆம், 13ஆம் வகுப்பு மாணவர்களிடையே ''சிறுவர்களின் உரிமைகளையும், பாதுகாப்பினையும் பேணுவதில் சமுதாயத்தின் பங்கு'' எனும் தலைப்பிலான கட்டுரை, ஓவியப் போட்டிகளும் —

சர்வதேச முதியோர் வாரத்தை முன்னிட்டு ''முதியோரைக் கனம்பண்ணுதல்'' என்னும் தலைப்பின் கீழான கட்டுரை, ஓவியப் போட்டிகளும் —

கோப்பாய் கோட்ட கல்வி அலுவலகத்தால் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடத்தப்படும் என்றும்—

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வயதுகூடிய முதியவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகளும், போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் அடுத்த வாரம் நடைபெறும் என்றும் — கோப்பாய் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (ஐ-5)

## அஞ்சல் சேவையாளர்கள் கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 15

தபால் திணைக்களத்தைக் கூட்டுத்தாபனமாக மாற்ற எடுக்கப்படும் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையம் முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அஞ்சல் தொலைத் தொடர்புசேவையாளர் சங்கத்தால் நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டம் நடந்த இடத்தில் பெரும் எண்ணிக்கையான பொலீஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

அங்கு பதற்றம் நிலவியபோதும் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை. (ஐ)

## மீசாலையில் இனந்தெரியாத சடலம்

தென்மராட்சி, ஒக். 15

மீசாலை ஐயா கடைச் சந்தியில் கைகள் பிற்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் நேற்றுக் காலை காணப்பட்டது. [இ-117]

## தீர்வுத்திட்டத்தை எதிர்த்து கொழும்பு நீதிமன்றில் வழக்கு

மட்டக்களப்பு, ஒக். 15

அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தயாரித்து வெளியிட்டிருக்கும் அதிகாரப் பரவலாக்கல் அலகுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அமெரிக்காவில் வசிக்ம் இலங்கையர் ஒருவர் கொழும்பு மாவட்ட நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

பி. ஆர். எச். விஜேசிங்க என்ற அந்த நபர் ''அறிவுமய சொத்துக்கள் அபகரிப்பு'' என்ற அடிப்படையின் கீழ் வழக்கைத் தாக்கல் செய்துள்ளதாக அரச சார்பு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

10 வருடங்களுக்கு முன்னர் தாம் எழுதிய நூல் ஒன்றில் காணப்பட்ட விடயங்கள் அரசின் அதிகாரப் பரவலாக்கல் யோசனையில் இடம்பெற்றிருப்பதாக அவர் தமது மனுவில் தெரிவித்துள்ளார். (ஐ-21)

## கமநலசேவை திணைக்கள விழாவையொட்டி சிரமதானம்

நெல்லியடி' ஒக். 15

கமநல சேவைத் திணைக்களத்தின் 40-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் முகமாக, கடந்த முதலாம் திகதி வடமராட்சிப் பகுதியில் சிரமதானமும், ரம் நாட்டு விழாவும் இடம் பெற்றன.

புலோலி கமநல கேந்திர நிலைய உதவி ஆணையாளர் எஸ். உருத்திரேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில், கெருடாவில் பகுதியில் உள்ள நெற்கொழுகுளம், வைரவர் ஆலய வீதி, ஊரிக்காடு பாதை போன்ற இடங்களில் சிரமதானம் மேற் கொள்ளப் பட்டது.

கெருடாவில் வடக்கு கமக்காரர் அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட இச் சிரமதானத்தில், கெருடாவில் வடக்கு கிராமசேவை அலுவலர் டி. தேவகுமார், கெருடாவில் வடக்கு கமக்காரர் அமைப்புத்தலைவர் கு. தங்கேஸ்வரன் உட்பட பல இளைஞர்களும், விவசாயிகளும் கலந்து சிறப்பித்தனர்.

அன்றைய தினம் புலோலி கமநல கேந்திர நிலையமும் சிரமதான மூலம் துப்புரவு செய்யப்பட்டு பல பயன் தருமரக் கன்றுகளும் நாட்டப் பட்டன. (ஐ-109)

## விதவைகளுக்கு தையல் இயந்திரம்

உரும்பிராய், ஒக். 15

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மேலும் ஒன்பது இளம் விதவைக் குடும்பங்களுக்கு சுயதொழிலில் ஈடுபடுவதற்காக தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இதுவரை 35 தையல் இயந்திரங்கள் சுய தொழில் வாய்ப்பில் ஈடுபடுவதற்காக இளம் விதவைக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (இ-154)

# இந்திய பிரதமர் குஜ்ரால் பிரிட்டனை 3 ஆம் தர வல்லரசு என்றாரா?

### பாகிஸ்தான் வன்மையாக கண்டனம்

இஸ்லாமாத், ஒக். 15

இந்தியப் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் பிரிட்டனை ஒரு மூன்றாந் தர வல்லரசு என கூறியதாக வெளியான செய்தியை பாகிஸ்தான் வன்மையாகக் கண்டித்துள்ளது.

காஷ்மீர் பிரச்சினை சம்பந்தமாக மத்தியஸ்தம் வகிக்க பிரிட்டன் முன்வந்தது தொடர்பாக குஜ்ரால் இவ்வாறு குறிப்பிட்டிருந்தார் என்று செய்திகள் தெரிவித்தன.

எனினும் இந்திய வெளிவிவகார அமைச்சு இதனை நிராகரித்து விட்டது. பிரதமர் குஜ்ரால் அப்படி கருத்துப்பட எதனையும் தெரிவிக்கவில்லை என்று அது அறிவித்தது.

பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் றொபின் குக் காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தனுக்குமிடையே பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு உதவ முன்வந்துள்ளார்.

எனினும் இந்தியா இது குறித்து திருப்தி அடையவில்லை என்று ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

## கிளின்ரன் பிரேஸில் விஜயம்

கொழும்பு, ஒக். 15

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் பிறேஸிலுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

தென் அமெரிக்க நாடுகளுடன் பொருளாதார உறவுகளை அதிகரிப்பதே இவரின் விஜயத்தின் நோக்கம் ஆகும்.

ஜனாதிபதி கிளின்ரன் தனது பிறேஸில் விஜயத்தின் முடிவில் இந்த வாரப் பிற்பகுதியில் ஆர்ஜென்ரீனா செல்வார்.

பிறேஸில் ஜனாதிபதி பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியுள்ளார் என்று செய்தியாளர்கள் மத்தியில் பேசும் போது கிளின்ரன் குறிப்பிட்டார்.

21 ஆம் நூற்றாண்டில் உலகில் மிகப் பெரிய பங்கை பிறேஸில் வகிக்கும் என்றும் அவர் சொன்னார்.

ஐ. நா. பாதுகாப்புச் சபை விரிவுபடுத்தப்படும் போது தனக்கு நிரந்தர அங்கத்துவம் வேண்டும் என்று பிறேஸில் ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளது. (இ-9)

## பிரிட்டன் மன்னிப்பு கோரும்

லண்டன், ஒக்.15

பிரிட்டனில் 1972 ஆம் ஆண்டு இடம்பெற்ற குடியுரிமை ஆர்ப்பாட்டத்தின் போது பிரிட்டிஷ் துருப்புக்களினால் 14 பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்துக்காக பிரிட்டன் சம்பிரதாய பூர்வமாக மன்னிப்புக் கோரவுள்ளது.

வட அயர்லாந்தில் ''இரத்தக் களரி ஞாயிறு'' என நினைவு கூரப்பட்டுவரும் சம்பவத்துக்காக பிரிட்டன் மன்னிப்புக் கோரும் என்ற தகவலை ஆளும் தொழில் கட்சி [illegible] மேற்கோள் காட்டி ''ரைமஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (ஐ)

## எகிப்தில் அலெக்ஸாண்டரின் கல்லறையை தேடும் முயற்சி

கெய்ரோ, ஒக். 15

மாவீரர் அலெக்ஸாண்டரின் கல்லறையைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக எகிப்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கி. மு. 3 ஆம் நூற்றாண்டில் மாவீரர் அலெக்ஸாண்டர் மரணமடைந்தார். ஓவிய வடிவமைப்புகளைக் கொண்ட அவரது கல்லறையின் ஒரு பகுதி மத்தியதரைக் கடற் பகுதியில் உள்ள எகிப்தின் அலெக்சாண்டிரா துறைமுகப் பகுதியில் இருந்து மீட்கப்பட்டது. அதனையடுத்து அவரது கல்லறை அப் பகுதியில்தான் இருக்கக் கூடும் என நம்பப்படுகிறது.

அப் பகுதியில் தேடுதல் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. (ஐ)


**புகைப்படக்கருவி பொய் கூறுவதில்லை**

**The Camera Doesn't Lie**

உங்கள் நினைவுச் சின்னங்களுக்கு நாம் தத்ரூபமான வண்ணம் தந்திடுவோம். புகைப் படத் தேவைகளுக்காக நீங்கள் வெவ்வேறு நிலையங்களுக்கு அலையத் தேவையில்லை. உங்கள் தேவையறிந்து நாம் வழங்கிடும் சேவைகள்:

- கடவுச்சீட்டு/ விசா படங்கள்
- வண்ண, கறுப்பு வெள்ளை படச்சுருள் கழுவுதல்
- படங்கள் பெரிதுபடுத்தல், பிரேம் பண்ணுதல்
- குளிரூட்டப்பட்ட ஸ்ரூடியோ
- திருமணம், மங்கள விழாக்களுக்கான படப்பிடிப்பாளர்கள்
- லெமினேட் செய்து பெயர் பொறிக்கப்பட்ட அல்பம் தயாரிப்பாளர்கள்

**ஹில்ஸ் கலர் போட்டோ (பிரை) லிமிட்டெட்**

**HILLS COLOR FOTO (Pvt) Ltd., LAB & STUDIO**

298 - 1/4, காலி வீதி, வெள்ளவத்தை.

T. P. 508430

(சி-1776)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தென்இந்திய திருச்சபை யாழ். ஆதீன இரண்டா...
# நினைவுக்குக் காணிக்கையாகச்...

## யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

கண்ணின் ஒளியெனப் போற்றும்
கல்வியினை — இம்
மண்ணில் மகுடமெனப் போற்றும்
தொன்மை மிகு யாழ்ப்பாணக் கல்லூரியிலே - இம்
மண்ணின் இறைமனிதரெனப் போற்றும்
பேராயர் அறிவர் அம்பலவாணர்
கற்றுக் கரையேறினார்
துள்ளித் திரியும் பள்ளிப்பருவத்திலே – பல்
கலையும் நிறைந்த மாணவ மணியாக
வண்ணச் சிறகடித்து வானத்திலே
துள்ளித் திரியும் பறவையைப்போல- யாழ்.
கல்லூரியிலே தலை சிறந்தார்.
இளமைப் பருவத்திலே தலைமை தாங்குவதில்
அவருக்குஇணை வேறு யாரும் இல்லை— கல்லூரி
கிறிஸ்தவ மாணவ சங்கம் முதல்— கல்லூரி
மாணவர் மன்றம், கிறிஸ்தவர் வாலிபர் சங்கம்
சாரணர் இயக்கம் இன்னும் சில மன்றங்கள்வரை
தலைவராகிச் சிறந்த தலைமை தாங்கினார்.
அவரது பேச்சுத்திறமையால் வார்த்தைகள்
மணியென ஒலித்து பலரையும் கவர்ந்தன —கல்லூரி
வாரமலர்களில் அவரது எழுத்தாற்றல்
சிறப்பாகக் கருத்தாக வெளிவந்தது — கல்லூரி
ஆங்கிலச் சஞ்சிகையை சிறப்பாக நடத்தி
பலரது பாராட்டையும் பெற்றார்.
யாழ்பபாணக் கல்லூரியை அரசாங்கம் சுவீகரிக்க
நினைத்துஅதற்காய் பிரயாசைப்படுகையில் —பேராயர்
குலேந்திரனுடன் ஒரு குருவானவராக— துணைநின்று
யாழ்ப்பாணக் கல்லூரியை பாதுகாத்தார் நற்
பேராயராக பின்னர் திகழ்ந்த காலத்திலும்
முடிவு வரை கல்லூரி நலனுக்காய்ப் போராடினார்.
கல்வி வளர்ச்சியில் மாணவர் சிறந்தோங்கிட — பல
ஆசிரியர்களை மேல் நாடுகளுக்கனுப்பி
சிறப்பான கல்வி வரலாற்றினை— யாழ்ப் பாணக்
கல்லூரியிலே உருவாக்கி வைத்தார்— இவையனைத்தின்
மணிமகுடமாக கல்லூரி ஆளுநர் சங்கத்தில்
சிறப்பான தலைமையில் தானிருந்து
கல்வி வளர்ச்சியில் கருத்துடன்
மனம் தளராது இறைவனின் மடியில்
இளைப்பாறும் வரையில் புதிய வரலாறு அமைத்து
வரலாற்று நாயகரானார்.

## வட்டுக்கோட்டை திருச்சபை

யாழ். தென்னிந்திய திருச்சபை முன்னாள் பேராயரும், எமது திருச்சபை உறுப்பினரும், ஆலோசகருமாகிய அதி வண. அறிவர். டி. ஜே. அம்பலவாணர் அவர்களுக்கு எமது இதய அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

இவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

## உடுவில் திருச்சபை மக்கள்

என் தகப்பனே! என்தகப்பனே! இஸ்ரவேலுக்கு ரதங்களும் குதிரை வீரருமாய் இருந்தவரே-II இராஜாக்கள் 2:12

எமது முன்னாள் பேராயர் கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் திடீர் மறைவு குறித்து அதிர்ச்சி அடைந்துள்ளோம். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினர், எமது திருச்சபை மக்கள், அவரது நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## தெல்லிப்பழை திருச்சபை ஊழியரும், சபையாரும்.

எமது அன்புக்குரிய முன்னாள் பேராயர் D. J அம்பலவாணர் அவர்களின் திடீர் மறைவை அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், ஆதீன மக்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## காரைநகர் திருச்சபை

திருத்தூதராய் திகழ்ந்து திருச்சபைகள்- உருவாக்கி
திருப்பணியின் விதைகளையே திசையெங்கும் தூவிவிட்டு
'மிஷன்' ஒரு "காட்சியாக" கண்டு கைகொடுத்து
கதிரவனாய்த் திகழ்ந்து கடவுளோடு கலந்திட்ட ஆயருக்கு
கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்-

## புங்குடுதீவு திருச்சபையும், புங்குடுதீவு வாழ் மக்களும்

புங்கு நகரில் பூத்த புது மலரே
புங்கு நகரின் புகழ் நிலவே – எம்
திருச்சபையின் தலைப் புதல்வரே
நானிலம் போற்ற பேராயரானீர்கள்!
உங்கள் மறைவினால் எம் இதயம்
தவிக்கிறது; மனம் உருகுகிறது
ஓராயிரம் ஆண்டுகள் ஆனாலும்
உங்கள் நினைவுகள் மாறாது.

பேராயரின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## நவாலி திருச்சபையும் மக்களும்

எமது திருச்சபையின் முன்னாள் ஆயர் அதிவணக்கத்துக்குரிய கலாநிதி டி. ஜே. அம்பலவாணரின் மறைவு கேட்டு மிகுந்த துயரடைந்தோம். அவர் எமது திருச்சபைக்கு ஆற்றிய அளப்பரிய சேவைகள் சொல்லில் அடங்கா.

நாங்கள் மீளக்குடியமர்ந்த காலத்தில் சபைக்குரு இல்லாதபோதும் எங்கள் ச்பையின் திருப்பலி ஆராதனைகளை நடத்தி எம்மை வழி நடத்தி வந்த எமது முன்னாள் பேராயருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் செலுத்திக் கொள்கின்றோம்.

## உடுப்பிட்டித் திருச்சபையும் மக்களும்

உடுப்பிட்டித் திருச்சபை ஊழியம் செய்திட
அறுபத்தியெட்டில் ஆண்டவர் தந்தார்
அருள்நகை பொலிந்திட அறிவாற்றல் துலங்கிட
இறைபணி உபதேசம் இனிதாக நடத்தினீர்!
கருணையும் அன்பும் கனிவுடன் இரக்கமும்
ஐய நின் பணியெமக்கு ஔடதமாக்கின
சிறுவர்க்குப் பள்ளி சிறப்பாக அமைத்தே
ஊறின்றி என்றும் உயர்வாகச் செய்திட்டு
பேராயராய் ஆதீனம் அடைந்தீரே ஐயரே
நேயமாய்த் தொண்டு நிதமுமே நிகழ்ந்தது
இம்மையிலிருந்து இறையோன் அழைக்கும் வரை
செம்மையாய் சேவைகள் செய்தமை மறவோமே
பிழைத்தாலும் மரித்தாலும் கர்த்தருக்கே யானீரே
இளைப்பாறுதல் பெறுவீர் இறையவன் பாதத்தில்!

## அச்சுவேலி திருச்சபையும், பகல் பராமரிப்புநிலையமும்

தளராத உறுதியும்
தலை குனியா பேச்சும்
தரணியில் சிலருக்கே உண்டு
அவ்வகையில் பின் நிற்கா – எங்கள்
ஆன்மீக சீலரே! — ஐயா
வெகுவிரைவில் எமை விட்டுப் பிரிந்த-
மாயம் தான் யாமறியோம்.
அம்பலவாணர் ஐயாவே — உங்கள் மரணம்
அம்பலமாகியதும்
வெம்பியது எம் மனம்
அமைதியாக தங்களது ஆத்மா
சாந்தியடையபிரார்த்திக்கும் உள்ளங்கள்

## சங்கானை திருச்சபை

பூந்தொட்டிக்குள் இருந்த பயிரை எடுத்து எங்கும் வேர் விட மண்ணில் நாட்டிய செயல் வீரர் பேராயர் டி. ஜே. யின் மரணம் எமக்கு ஆழ்ந்த அதிர்ச்சியையும் கவலையையும் தந்துள்ளது.

கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அளவெட்டி, சண்டிலிப்பாய் திருச்சபைகளும், மக்களும்

எம்மை வழி நடத்திய எமது பேராயர் பேரருள்மிகு டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் மறைவு எம்மை நிர்க்கதிக்குள்ளாக்கி விட்டது. அதிர்ச்சியுற்றிருக்கும் குடும்பத்தினருடன் எமது கண்ணீர்ப் பூக்களையும் காணிக்கையாக்குகின்றோம்.

## இணுவில் தேவகிராமம் திருச்சபையும், மக்களும்

தெய்வீக தாரகையொன்றை
எதற்கும் அஞ்சா நெஞ்சமுள்ளவரை
கல்வியில் கரைகண்ட உத்தமரை
இருபத்தியாறாண்டு பணி செய்தவரை
ஆனையிறவுக்கப்பால் இறை பணி பரப்பியவரை
போஷாக்கின்றி இருப்பவர்களுக்கும்
ஆதரவற்றவர்களுக்கும் வாழ்வளித்திட்ட
உத்தமரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர்
ஆதீனம் பேராயர் குருமார் அனைவருக்கும்
கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குகின்றோம்

## நுணாவில் திருச்சபையும் மக்களும்

தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயத்தின் முன்னாள் பேராயர் டி ஜே. அம்பலவாணர் அவர்களின் திடீர் மரணிப்பு யாழ். பேராயத்துக்கு மட்டுமல்ல, எம் மண்ணின் மக்கள் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

மேன்மைதங்கிய எம் பேராயரின் மறைவால் நாம் அதிர்ச்சியும், பெரும் வேதனையும் அடைகின்றோம்.

## பல்கலைக்கழக கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம்

யாழ். கிறிஸ்தவ மாணவர்கள் மத்தியில் ஒன்றிப்பை நிலை நாட்டும் நோக்கத்தில் எமது நிலையத்தை உருவாக்க வழி வகுத்த எமது அன்புப் பேராயரின் மறைவையொட்டி ஆழ்ந்தகவலையும், மன வேதனையும் அடைகிறோம்.

அவரின் பிரிவால் துயருறும் அவர்களின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## சத்தியபுரம் திருச்சபைமக்கள்

ஆயனுடைய இழப்பின் துயர்மாறு முன்னே, எமது பேராயர் பேரருள்மிகு கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் மறைவு எமக்கு மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் தருகின்றது. அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருடன் கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

## குடத்தனைதிருச்சபைமக்கள்

எமது இளைப்பாறிய பேராயர் பேரருள்மிகு கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் மறைவு எமக்கு அதிர்ச்சியையும், வேதனையையும் அளிக்கின்றது. அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

## வரணி திருச்சபை மக்கள்

எமது முன்னாள் பேராயர் பேரருள் மிகு கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் மறைவு எமக்கு மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கின்றது. அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## மானிப்பாய் கிறீன், இணுவில் மைக்லியட் ஆஸ்பத்திரிகள்

வேதத்தைத் தினமும் பேசி
விண்முட்ட புகழைத் தேடி
எது வந்த போதும் எதிர் கொண்டு
யேசு சொன்ன
வழி நின்று பணிபுரிந்த
ஆயரே, எங்கள் அம்பலவாணரே!
பிரிந்து நீர் சென்றீர் ஐயா!
கிறீன், மைக்லியட் கண்ணீர்
...யே ஏங்கி நிற்கின்றன

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, பிள்ளைகளுக்கு ஆறுதல் கூறி அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.



## யாழ்ப்பாண கிறிஸ்...

தென்னிந்திய திருச்சபையி... னத்தின் முன்னாள் பேராயர் க... ரிய டி. ஜே. அம்பலவாணர் ஆ... யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியத்...

பேராயர் ஒன்றியத்தின் ... ராகவும், காரிய நிர்வாகசபை உ... ஆற்றிய சேவைகள் அளவிடமுடிய... களின் ஐக்கியத்தையும், ஒருமைப்... பெருமுயற்சிகள் செய்து வந்தார்...

யாழ்ப்பாணம் பொதுசன ... லிருந்த பல்லாயிரக்கணக்கான ... பராக்கப்பட்ட பொழுது அதனை ... உலக கிறிஸ்தவ ஸ்தாபனத்திலிரு... கொடுத்ததுடன், சிறந்த நூல்கள் ... பெற வேண்டுமென்ற பெருநோக்... என்றும் நினைவு கூரப்படவேண்டி...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழ... மொன்றை நிறுவ முயற்சி செய்தது... மிகவும் வசதி குறைந்த கிறிஸ்தவ... மைப்பரிசில் திட்டமொன்றை நி... பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டுக்... ருக்குரியதாகும்.

காலஞ்சென்ற தந்தை செ... வருடாந்தம் நினைவு கூர்ந்து ஆ... அவரைக்குறித்த பேருரைகளை ... மூலம் ஏற்பாடுகள் செய்து வைத்த... பேருரைகளை நிகழ்த்தி கிறிஸ்தவ ... வெளிப்படுத்தினார்.

இவருடைய பிரிவினால் துய... விசேடமாக தென்னிந்திய திருச்ச... சாதீன மக்களுக்கும், யாழ்ப்பாண... சார்பில் எமது ஆழ்ந்த துயரைத் ... ருடைய ஆத்மா நித்திய இளை... வெளிச்சமும் பெற இறைவனை ...

யாழ்ப்பா...

## தென் இந்திய திருச்ச...

எம் தந்தாய் எம், தந்தாய்!
எம் திருச்சபையின் தேரே,
நீல வானில் நிமிர்ந்து நின்ற...
நீதியின் ஒளிச்சுடரே
நீங்கள் தேய்ந்து மறைந்து ...
கலைந்து போனதென்ன?
இறைமகன் இயேசுவின் தலை...
இறை அடியவரின் முன்னவரே...
இறை மாந்தரின் நல்லாயனே...
இறைவனின் ஆலய ஒளி வி...
காரிருள் நீங்கி விடியுமுன்னே...
விழிகள் தூங்கி விழிக்கும் மு...
நடுச் சாமத்தில் நீங்கள் அ...
காலங்கள் வரும் முன்னே
காட்சிகள் கண்டீர்கள் — எங்...
கேள்விகள் வரும் முன்னே ...
நீதியின் முன்னே நிழலானீர்க...
அவையின் நடுவே தூண் ஆ...
இறைவனின் மடியில் சேய் ஆ...
இகத்தில் மணக்கும் பூவானீர்...
அடியவர் இதயத்தில் நினை...
உலகத்தில் எங்கும் புகழ் ஆ...
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலு...
இதயத்தில் உங்கள் நினைவுக...

# ...வது பேராயர் டி.ஜே. அம்பலவாணர்
# ...சொரியும் கண்ணீர்ப் பூக்கள்



## ...தவ ஒன்றியம்

...ின் யாழ். அத்தியட்சாதீ
...லாநிதி அதிவணக்கத்துக்கு
...ண்டகையின் திடீர் மறைவு
...திற்குப் பேரிழப்பாகும்.
...தலைவராகவும், செயலாள
...றுப்பினராகவும் இருந்து
...ாதனவாகும். இவர் சபை
...பாட்டையும் வளர்ப்பதற்கு
...

...நூல் நிலையமும், அதி
...நூல்களும் எரித்துச் சாம்
...மீளவும் கட்டி எழுப்ப
...ந்து பெருநிதி பெற்றுக்
...இந்த நிலையத்தில் இடம்
...குடன் செயற்பட்டமை
...யதாகும்.

...கத்தில் சிறந்த சிற்றாலய
...டன், அங்கு கல்வி பயிலும்
...ப் பிள்ளைகளுக்கென புல
...றுவி அதன் மூலம் வறிய
...த உழைத்த பெருமை இவ

...ல்வாவின் பிறந்த தினத்தை
...ராதனை நடத்தவும்
...கிழ்த்தவும் ஒன்றியத்தின்
...ார். பல முறைகள் தானே
...சமூகத்தின் நன்றிக்கடனை

...ருறும் குடும்பத்தாருக்கும்,
...பை யாழ். அத்தியட்
...கிறிஸ்தவ ஒன்றியத்தின்
...தெரிவிப்பதுடன், இவ
...ப்பாறுதலும், நீங்கா
...இறைஞ்சுகின்றோம்.
...ணம் கிறிஸ்தவ ஒன்றியம்

## ...பைக் குருமார்

...பாகனே!
...வெண்ணிலவே

...பாகுமுன்னே

...மகனே

...க்கே!
... – எம்
...ன்னே
...னந்ததென்ன?

...ள்
...தில் ஆனீர்கள்
...ள் – திரு
...ீர்கள்
...னீர்கள்
...கள் — என்றும்
...வானீர்கள்
...ீர்கள்
...ம் - எங்கள்
...ள் ஓயாது!

## யாழ்ப்பாணக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீன முன்னாள் பேராயர் அதிவண. கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம் (J.C A.A),
யாழ்ப்பாணக் கல்லூரி,
வட்டுக்கோட்டை.

## சாவகச்சேரி திருச்சபை

கர்த்தரின் வழியினை
கருத்துடன் காட்டியே
சித்தமாய் பல சேவை
இத்தரணியில் ஆற்றினீர்.

மண்ணிலே உம் உடல்
மாய்ந்து போயினும்
மனமதில் என்றும்
மறையாது நிற்பீர்.

## யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியர் கழகம்

'ஆசிரியக் கழகத்தை' அரவணைத்த
புரவலன் உன்
நேசிப்பிற் கட்டுண்ட நெஞ்சங்கள் கவி
தொடுத்தே
யாசிக்கும் உன் வரவை! யாது பயன்?
இனிமேல் உன்
ஆளுமையும் இன்றி அந்தரிப்போம்;
நிலை குலைவோம்!
வாழும் இத்துயர்க்கால
வள்ளல் எனவிருந்தே
நேரும் இடர்களைந்தெம் நெஞ்சில்
நிறைந்தவனுன்
பாதம் பார்த்தெங்கள்
பாதை அமைத்திருந்தோம்!
ஆலம் விழுதுகளாய் ஆயிரம் பணிசெய்தே
ஆண்டிருந்த அம்பலத்து
வாணன் உன் காலம்
வரலாற்று முத்திரையாம்!
ஆனவரை உன்றன்
அடிச்சுவட்டில் நடைபயின்று
வானம் தொடும் புகழை வரும் நாளில்
எய்திடவே
நாமும் துணிவோம் நயந்து!!

யாழ்ப்பாணக்கல்லூரி
ஆசிரியர்கழகம்

## நகர்ப்பணித் திருச் சபையும், மக்களும்

திருச்சபைகள் பணிவோடு மக்கள் பணி
செய்தும்
தமிழ் மக்கள் இன்னல்களை உலகெங்கும்
எடுத்துரைத்து
இறைபணியார் உருவாகக் கல்லூரி தனை
அமைத்து
இறைவனுக்குள் இளைப்பாறிய இனிய
நல் மேய்ப்பனுக்கு
எங்கள் கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கை
யாக்குகின்றோம்.

## யாழ்ப்பாணக் கல்லூரி வை. எம். சி. ஏ.

யாழ்ப்பாணக் கல்லூரி வை.எம் சி.ஏ ஸ்தாபனத்தின் முதலாவது மாணவத் தலைவராகவும், எமது கல்லூரி ஆளுநர் சபைத் தலைவராகவும் அரும் பணிபுரிந்த எமது முன்னாள் பேராயர் பேரருட் திரு. கலாநிதி டேவிட் ஜெயரத்தினம் அம்பலவாணர் அவர்களுக்கு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரது மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவிக்கின்றோம்.

## நவாலி வை. எம். சி. ஏ.

தென் இந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் அதிவண. கலாநிதி டி.ஜே. அம்பலவாணரின் மறைவினால் மிகவும் துயருற்றோம். அவர் எமது தேசிய சபையின் முன்னாள் துணைப் போஷகராக இருந்து எங்களுக்கு மிகவும் உறுதுணையானவர்.

ஏழைகளின் வாழ்வில் திருப்தி கண்ட பேராயர் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைச் செலுத்துகிறோம்.

## யாழ். ஆதீனத்தின் பகல் பராமரிப்பு நிலையங்கள்

எமது இளைப்பாறிய பேராயர் பேரருள்மிகு கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் மறைவு எமக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த வேதனையையும் தருகின்றது. அன்னாரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## வரணி மிசன் பண்ணை வரணி மிசன் கடை

முன்னாள் பேராயர் பேரருள் மிகு கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் திடீர் மறைவு எமக்கு ஆழ்ந்த வேதனையையும் அதிர்ச்சியையும் தருகின்றது. அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

## தொழிற்பயிற்சி நிலைய ஆசிரியர்கள், மாணவிகள்

எமது பேராயர் பேரருள்மிகு கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் அவர்களின் மறைவு எம் அனைவருக்கும் மிகுந்த அதிர்ச்சியையும் வேதனையையும் அளிக்கின்றது. அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## இறையியல் கல்லூரி குடும்பத்தினர்

எம் தந்தையாய் அன்பின் உருவாய்
அடியவரின் வழியாய்
இறையியல் குடும்பத்தின் இதயமாய்
அருட்பணியின் அகல் விளக்காய்
இருந்தவரே!
இறைவனின் ஏவுதலில்
தீர்க்கமான தரிசனத்தால்
இறையியல் கல்லூரியை உருவாக்கி
இறையடியார்களைத் தெரிந்தெடுத்து
கல்லூரி சிதைந்திட்ட காலத்திலும்
கண்களில் நீர் வடிய கட்டி
எழுப்பினீர்களே!
நீங்கள் கண்ட தூரக்காட்சி
விடியுமுன்னே
இறைவன் மார்பினில் சாய்ந்தீர்களே!
ஆயிரம் ஆண்டுகள் ஆனாலும்
மாறாது உங்கள் நினைவுகள்.

பேராயரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## சிறுவர் இல்ல மாணவர்கள்

தென்னிந்திய திருச்சபையின் யாழ். பதவியை பிரிவின் இரண்டாம் பேராயர் பணிவுடன் ஏற்ற போது பேராயர் பதவியே புதுப்பிறவி எடுத்தது ஐயா!

அன்பிற்கும் ஆதரவிற்கும் ஏங்கிநிற்கும்
பிஞ்சுகளின்
துயர் நீக்க ஊர்தோறும் சிறுவரில்லம்
அமைத்தே
கர்த்தரின் தூதுவராய் கருணை மழை
பொழிந்து நின்று
கல்வியோடு நற்பண்பும் கலந்து அளித்த
ஐயாவே.
என் பிள்ளைகளின் கண்ணில் நீர்வடியக்
கூடாதென
எம் தேவை யாவுமுணர்ந்து சேவை
செய்தீரே
இன்றெம் விழிகளில் ஆறல்லவா
ஓடுகின்றது
இதையெல்லாம் பாராமலே நீர் மீளாத்
துயில் கொண்டீரோ!
இனியெம் விழி நீர்துடைக்க யாருள்ளார்
இப்புவியில்?

## யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவனம்

இந் நிறுவனத்தின் ஸ்தாபகராகிய எமது மதிப்புக்குரிய முன்னாள் பேராயர் D. J. அம்பலவாணர் அவர்களின் திடீர் மறைவை அறிந்து ஆழ்ந்த அதிர்ச்சியும், வேதனையும் அடைகின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயருறும் பேராயரின் குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவரின் மறைவு எமது நிறுவனத்திற்கு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்,

## நற்பண்பும் ஆற்றலும் மிளிர்ந்த பேராயர்

தென்னிந்திய திருச்சபையின் யாழ். ஆதீனத்தின் இரண்டாவது பேராயராகிய பேராயர் டி. ஜே. அம்பலவாணர் 1971 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வட்டுக்கோட்டை பேராலயத்தில் பேராயராக அபிஷேகம் பண்ணப்பட்டார். இலங்கையிலே அப்பொழுது கிறிஸ்தவர்கள் அனேக பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. 1960களில் சிங்கள பௌத்த பேரினவாதம் கூர்மையடைந்து கொண்டிருந்தது. தென்னிந்திய திருச்சபை யாழ் ஆதீனத்தின் அடித்தளமாக விளங்கிய நன்கொடை பெறும் பாடசாலை திட்டம் (Assisted Schools) 1960 ஆம் ஆண்டு நீக்கப்பட்டது. மிஷன் பாடசாலைகள் அரசுடைமைகள் ஆக்கப்பட்டன. இந்தச் சட்டம் பின்னர் நீக்கப்பட்டது. எனினும் இலங்கை அரசாங்கத்தினுடைய சிந்தனைகள் எந்த நோக்கில் சென்று கொண்டிருந்தன என்பதனை புலப்படுத்தியது.

இவ்வாறாக கிறிஸ்தவ மக்கள் இலங்கையிலே தமது எதிர்காலத்தைக் குறித்து சோர்வடைந்த நிலையிலே தான் 43 வயது நிரம்பிய வண. டி. ஜே. அம்பலவாணர் தமிழ் புரட்டஸ்தாந்து மக்களின் தலைவராகப் பதவி ஏற்றார். இளமை பொருந்திய அம்பலவாணர் பேராயர் ஆகியதனைக் குறித்து அப்பொழுது பலரும் மகிழ்ச்சி அடைந்தனர். யோவேல் தீர்க்கதரிசியின் வார்த்தைகளை எண்ணிப் பூரிப்படைந்தனர்.

அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்க தரிசனஞ் சொல்லுவார்கள்: உங்கள் மூப்பர் சொர்ப்பனங்களையும்; உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். (யோவேல் 2:20)

வயலின் போன்று செயலாற்றுவார்

பேராயர் அம்பலவாணர் பக்தியும் சிறந்த மதிநுட்பமும், அயராத உழைப்பும், தளராத உறுதியும் கொண்டவர். எந்த வயதிலும் வாலிபன் போல செயலாற்றும் திறன்மிக்கவர். அவர் அடிக்கடி தமது ஊழியர்களைப் பார்த்து உங்கள் சுகம் உங்கள் நினைப்பின்படியே அமைகிறது என்று கூறிக்கொள்வார். (You are as healthy as you think) ஒடுக்கப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர். ஏழைகள் மீது அவர் மிகுந்த அன்பு கூர்ந்தவராயிருந்தார்.

ஒடுக்கப்பட்டவர்களுக்கும், உரிமை மறுக்கப்பட்டவர்களுக்கும் குரல் கொடுத்தல் அவருடைய இயல்பு. இதனாலே தென் இலங்கையில் இருந்த பிரமுகர்களும், சில வெளிநாட்டு அறிஞர்களும் அவரைத் தவறாகப் புரிந்து கொண்டனர். எகிப்து நாட்டின் அரச கோபத்தை துறந்த மோசே முனிவர், அமெரிக்காவின் கறுப்பு இன மக்களின் சிவில் உரிமைகளுக்காகப் பாடுபட்டு உயிர் துறந்த டாக்டர் மாட்டின் லூதர் கிங். இந்தியாவிலே தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காக தன் வாழ்வை அர்ப்பணித்த டாக்டர் வி. ஆர். அம்பேத்கார் ஆகியோர் இவருக்கு உந்து சக்திகளாக விளங்கினார்கள். ஜவகர் லால் நேரு அவர்கள் தமது அருமை மகள் இந்திரா பிரியதர்ஷினிக்கு எழுதிய வசனம் ஒன்றை பேராயர் அடிக்கடி நமக்கு ஞாபகம் ஊட்டுவார். ''வரலாற்றை எழுதுவது நல்லது ஆனல் வரலாற்றை உருவாக்குவது அதனைவிட மேலானது'' என்பதே.

பேராயர் அம்பலவாணருடைய இறையியல் சிந்தனைகள் பெரும்பாலும் பேராயர் சபாபதி குலேந்திரனுடைய இறையியலை ஒட்டியதாகவே இருந்தது. பவுல் அப்போஸ்தலனால் முன்வைக்கப்பட்டு, புனித அகுஸ்தீனாரினாலும், மார்ட்டின் லூதரினாலும், கார்ல் பாத்தினாலும் விளக்கப்பட்ட மீட்பியலுக்கு விசுவாசமாகவே இருந்தார்.

திறமையும் நற்பண்பும் ஒருங்கே அமையப் பெற்ற மனிதர்களை காண்பது மிகவும் அரிது. திறமை படைத்தவர்கள் உலகிலே பலர் இருக்கின்றார்கள். ஆனால் ஆற்றலுடன் நற்பண்புகளையும் வாய்க்கப் பெற்ற ஒரு சிலரே உலகில் இருக்கின்றனர். அத்தகைய ஒரு தலைவர் நமக்கு கிடைத்தமைக்காக நாம் இறைவனைப் போற்ற வேண்டும்.

[நன்றி: The Jaffna Diocese of the Church of South India - Bulletin 46]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நீர்வை அரசகேசரி விநாயகர் ஆலய
பிரதமகுரு சிவஸ்ரீ
## கா. சாம்பசதாசிவக் குருக்கள்
அவர்களது
## எழுபதாண்டுப் பூர்த்தியைப்
# பாராட்டி வாழ்த்து

அந்தணர் குலத்தின் செந்தண்மை மிக்க
ஆன்றோனாக அகவை எழுபது கொண்டும்
இயற்கைவளமிகு நீர்வை ஊரினில்
ஈசன் முதல்வனை என்றும் பூசனை செய்து
உவகையுடனே நல் உள்ளத்தூய்மையாய்
ஊரார் போற்றிட ஊக்கமாய் உழைத்து
ஏற்றமாய் யாவரும் போற்று நற்பண்புடன்
ஐங்கரன் கருணை அனைவரும் பெறவே
ஒப்புயர்வற்ற நற்தெய்வப் பணிதனில்
ஓதிடுவேதியர் குலத்தின் ஒளியாய்
ஔவைபுகழ் விநாயகர் அருள்நிறைந்து வாழ்க.

நீர்வையூர் பெற்ற நல்அந்தணப் பெரியோய்!
சீர்சிறப்புடைய சாம்பசதாசிவக்குருவே - நீவிர்
அரசகேசரி விநாயகர் அருள் விளங்கப் பணி செய்து
அந்தணர் குலச்சுடராய் ஆண்டு பல வாழி! வாழி!!

— நீர்வை மணி

(50531)

---

டிறிபேக் கல்லூரி - சாவகச்சேரி
## பழைய மாணவர் சங்கம்
# பொதுக்கூட்டம் - 1997

மேற்படி சங்கத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் **25 - 10 - 97** (சனிக்கிழமை) பி. ப. 3-00 மணிக்கு (இ. நே.) பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் கேட்கப்படுகின்றனர். பிரேரணைகள் இருப்பின் **20-10-97**க்குமுன் தலைவர், உபசெயலாளருக்கு தயவு செய்து அறிவிக்கவும்.

பொ. ச. ஞானசீலன்
உபசெயலாளர்.

மு. நாகேந்திரராசா
தலைவர்.

(சி/1772)

---

## MODERN EDUCATION CENTRE
NELLIADY KARAVEDDY

# 97 DAY CLASS

| | |
|---|---|
| பொருளியல் | திரு. லோகசிங்கம் |
| கணக்கியல் | திரு. பவான் |
| இரசாயனவியல் | திரு. வசீகரன் |
| பௌதிகவியல் | திரு. குமரன் |
| விலங்கியல் | திரு. கெங்காதரன் |

மேற்குறிப்பிட்ட பாடங்கள் யாவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நேர அட்டவணைகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய பாடங்களும் அதற்கான நேரங்களும் பின்னர் அறிவிக்கப்படும்.

- நிர்வாகி

(சி-1775)

---

விழிகள் அருவி நீர் பாய
# இதய அஞ்சலி

## பேராயர் அறிவர் டி.ஜே அம்பலவாணர்
அவர்கள்

தென்இந்திய திருச்சபை — யாழ்.
பேராயத்தின் முன்னாள் பேராயர்

**டி. ஜே. அம்பலவாணர்**

அவர்களின் திடீர் மரணிப்பு எம் மண்ணின் மக்கள் அனைவருக்கும் நிறைவாக்க முடியாப் பேரிழப்பாகும்.

பேராயரின் மறைவால் நாம் அதிர்ச்சியும், நினைக்குந்தோறும் இதயத்தில் பெரும் வேதனையும் அடைகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், பணியாளர்கள்.

**நவில்ட் செவிப்புலன் விழிப்புலன்
இழந்தோர் பாடசாலை,**
கைதடி.

(சி - 1768)

---

## விவசாய குறுவினா இறுதிப்போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ் கல்வி வலயம் -2 இல் உள்ள கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விவசாய குறுவினாப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான வலய மட்ட இறுதிப்போட்டி இன்று புதன் கிழமை காலை 8-30மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் நடைபெறும். (இ)

## பாலர் பாடசாலை கட்டட வேலை

நெல்லியடி, ஒக். 15

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினால் இரு இடங்களில் சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் பாலர் பாடசாலைகள் கட்டப்பட்டு வருகின்றன.

கொற்றாவத்தை கரணவாய் வடக்கு, மற்றும்உடுநகர் உடுப்பிட்டி ஆகிய இரு இடங்களிலுமே இப் பாடசாலைக் கட்டட வேலைகள், அப்பகுதி பொது மக்களின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-109)

## யாழ்.மத்திய கல்லூரிக்கு டக்ளஸ் விஜயம்

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ்ப்பாணம் வந்துள்ள ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் தமது பழைய கல்லூரியான யாழ். மத்திய கல்லூரிக்கு விஜயம் செய்தார்.

அங்குள்ள குறைபாடுகளை நேரில் பார்த்து கேட்டறிந்து கொண்ட அவர் கல்லூரி மைதான விருத்தி உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து கல்லூரி நிர்வாகத்துடன் கலந்துரையாடினார். (உ)

## மாணவியை பாம்பு தீண்டியது

இரவு வேளை விடுதியின் பின்புறம் சென்ற மாணவி ஒருவர் பாம்பினால் கடியுண்டார்.

பருத்தித்துறை புனித மரியாள் விடுதியில் கடந்த சனிக்கிழமை இரவு 8 மணியளவில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

புலோலி வராத்துப்பளையைச் சேர்ந்த செல்வி தர்மலிங்கம் மிதுலா (வயது 14) என்னும் மாணவியே பாம்பினால் கடியுண்டு மந்திகை மருத்துவ மனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். (ஐ-109)

## நெடுந்தீவில் மாதாந்த உதவிப் பணம்

நெடுந்தீவு பிரதம தபாலகத்திலும், அங்குள்ள இருஉப தபாலகங்களிலும் கடந்த புதன்கிழமை தொடக்கம் மீண்டும் நான்கு மாதங்களுக்கான பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்பட்டு வருகிறது. இது வரை இப் பணத்தைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் காலந்தாழ்த்தாது வந்துபெற்றுக் கொள்ளுமாறு நெடுந்தீவுத் தபாலதிபர் நாகலிங்கம் தங்கராஜா கோரிஉள்ளார்.

## கடற்றொழில் சங்க சமாஜம்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள அனைத்து கிராம கடற்றொழிலாளர் சங்கங்களையும் உள்ளடக்கிய கடற்றொழிலாளர் சமாஜம் ஒன்று விரைவில் அமைக்கப் படவுள்ளது.

இதன் ஊடாகவே மீனவர்களுக்குரிய மீன்பிடிச் சாத [illegible] கடற்றொழில் பரிசோதகர் சோ. விக்கினேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-111)

---

வர்த்தகர்களுக்கு!
## மீண்டும் மொத்த வியாபாரம்

நேரடியாகக் கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்டு விற்பனைக்குள்ளன.

★ மணிக்கூடுகள் ★ இமிற்றேசன்
★ லேஸ், நூல், பட்டின்ஸ் — தையல் உபகரணங்கள்
★ B பாக், பெல்ட், பேஸ் ★ றொய்ஸ், சில்வர்
★ சகல அழகு சாதனப் பொருள்கள்.

# ஜெயா அழகு மாடம்
**127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.**
[ பரடைஸ் ஹோட்டல் அருகில் ]

[சி/1767]

---

ROTARACT CLUB

## S. M. FERNANDO
ஆதரவில்
## சுன்னாகம்
# றோட்டரக்ட் கழகம்

இன்ரறக்ட் கழக பாடசாலைகளுக்கிடையே
**பட்டிமன்றத்தினை**
நடத்தவுள்ளது

இதில் கலந்துகொள்ள விரும்பும் பாடசாலைகள் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
சுன்னாகம் றோட்டரக்ட் கழகம்

[50539]

---

## ஆயர் D. J. அம்பலவாணர்

அண்ணல் கிறிஸ்துவின் வழி நின்று ஒரு நல் ஆயனாகவும் ஆசானாகவும் தமது மக்களை வழி நடத்த தம்மையே அர்ப்பணித்த ஆயருக்கு

# எம் இதய அஞ்சலி!

**கிறிஸ்தவ நாகரிகத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.**

(50545)

---

# கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து மகளிர்கல்லூரி பிரதி அதிபர்
**செல்வி யோ. கந்தையா**
அவர்களின் அருமைச் சகோதரர்
## திரு. பி. கே. பாலசிங்கம்
(முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர், கல்வி அமைச்சின் முன்னாள் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர், கொழும்பு)

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரத்தில் நாமும் பங்கு கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலக ஊழியர்கள்,
யா/ இந்து மகளிர் கல்லூரி.**

(50544)

---

# 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் பொ. செல்வரத்தினம்
(ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு-''

திருமதி செல்வரத்தினம்
மனைவி.

''மன்றம்'' லோட்டன் றோட்,
மானிப்பாய்.

(50528)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதச் சடங்குகளும் ஆன்மீக நம்பிக்கையும் மன வடுக்களை நீக்க பெருமளவில் உதவும்

சடங்குகள் மூன்றாம் உலக நாடுகளில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கின்றன. சடங்குகளினூடாக நம்பிக்கையையும், ஆதரவையும், அர்த்தத்தையும் பெறமுடியும். முக்கியமாக மரணச்சடங்குகள் கழிவிரக்கம் கொள்ளவும், ஆதரவை உணரவும் உதவுகின்றன. போர்ச்சூழல் காரணமாக மரணச்சடங்குகள் கலாசாரத்துக்கு ஏற்றபடி நடைபெறாதவிடத்து பாரதூரமான மனத்தாக்கம் ஏற்படுகின்றது. எனவே ஏற்கனவே இருந்து வருகின்ற சடங்குகளை இயற்றுவதற்கு சமூகம் ஊக்கப்படுத்தப்பட வேண்டும்.

எமது உணர்வுகளை வெளிப்படுத்தவும், ஆதரவைப் பெறவும் பொழுது போக்குச் செயற்பாடுகளான விளையாட்டுக்கள், ஆடல் பாடல், சமய விழாக்கள் போன்றவை உதவும். மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ள ஆன்மீக நம்பிக்கையும் பலமும் உதவி செய்யும். எமக்கு நடந்தவற்றிற்கான அர்த்தத்தைக் காணல் மனப்பாதிப்பிலிருந்து மீண்டு வருவதற்கு இன்றி அமையாததாகும். அர்த்தத்தைக் கண்டதும் அனேகமானோர் மனத்தாக்கத்திலிருந்து விரைவில் மீண்டு விடுகின்றனர். கர்ம வினை சம்பந்தமான இந்து சமயத்தின் நம்பிக்கையானது முக்கியமானதாகும். போர் மேகம் சூழ்ந்த யாழ்ப்பாணத்தில் உணர்ச்சி வெளிப்பாட்டு சமய செயற்பாடுகள் (பக்தி புதுவாழ்வு, இயக்கம்) ஏதோ காரணம் இல்லாமல் பிரபல்யம் அடைவதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

பல்வேறு சாந்த வழிமுறைகள், பதகளிப்பு, மெய்ப்பாட்டு நோய்கள் போன்றவற்றில் குணமாக்கலுக்கு உதவுகின்றன என்று விஞ்ஞான ஆராய்ச்சிகள் மூலம் தெரிய வந்துள்ளது. இறுக்கமடைந்த தசைகளே உடல் வலிகளுக்குமுக்கிய காரணம். சாந்த முறைகள் இதை மாற்றித் தளர்வை ஏற்படுத்துகின்றன. பலரிடம் காணப்படும் பெருமூச்சு விடுதல் என்பதும மெய்ப்பாட்டு நோய் வகையைச் சார்ந்ததே ஆகும். மெதுவாக ஆழ்ந்து அமைதியாக மூச்சு விடப் பழகுதல் இதற்கு உதவும். இத்தகைய விளைவுகளைத்தரும் யோகாசன முறைகள் எம்மிடையே இருப்பது வரப்பிரசாதமே.

பொதுவாக சுவாசமானது எமது கட்டுப்பாட்டில் இல்லாது ஆழ்மனம் மூலம் செயற்படுவதாகும். இது எமது மன நிலையுடன் தொடர்புபட்டுள்ளது. நாம் மிதமாக உணர்ச்சிவசப்படும் போது விரைவாகவும் ஒழுங்கற்றும் சுவாசம் நிகழ்ந்து அதி உணர்ச்சிவசப்படும் போது விரைந்து ஆழ்ந்த சுவாசங்கள் ஏற்படுகின்றன. சுவாசத்தை எமது மனக்கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து ஆழ்ந்து ஒழுங்காகச் சுவாசிக்க முற்படுவதே எமது இலக்காகும்.

யோக அப்பியாசமான சாந்தி அல்லது சாவாசமானது தசைகள் தளர்வடைய உதவும். ஏனைய உடல் அப்பியாசங்கள் முக்கியமாக யோக, தாய்சி (Tai-Chi) என்பவை உடலைத் தளர்வடையப் பண்ணவும் உடல், உள ஆரோக்கிய நிலைக்கும் உதவும்.

## தியான முறைகள்

ஓர் அர்த்தமுள்ள சொல்லையோ, சொற்றொடரையோ மீண்டும் மீண்டும் தொடர்ந்து சொல்லும் பஜனை (ஜெபம்) முறையானது சாந்த நிலையை ஏற்படுத்தும். தொடக்கத்தில் வாய்விட்டுச் சொல்லி சிறிது கால் பயிற்சியின் பின் வாய்க்குள் முணுமுணுத்து இறுதியாக வெறுமனே அச்சொல்லை நினைத்திருக்க வேண்டும். இந்துக்கள் 'ஓம்' என்னும் மந்திரத்தையோ வேறு பொருத்தமான எதையுமோ தேர்ந்தெடுக்கலாம். கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் யேசு ஜெபத்தை (யேசுவே எம்மீது இரக்கமாயிரும்) பயன்படுத்தலாம். ஆழ்மன தியான (Transcendental Meditation) முறையும் இத்தகைய விளைவை ஏற்படுத்தும்.

பல்வேறு தியான முறைகளும் உள்ளன. கிறிஸ்தவர்கள் ஆழ்ந்து இறைவனை சிந்தித்தல் (Contemplation) முறையைத் தேர்ந்தெடுக்கலாம். தியானமானது ஒரு வலிமைமிக்க சாந்த வழி முறையானாலும், அதைப் பயிற்சி பெற்ற ஒருவரிடம் இருந்தே பயில வேண்டும். முக்கியமாக உளமாய நோயினால் பாதிக்கப்பட்டோர் தியானங்களைப் பயிற்சி செய்வது நோய் நிலையை அதிகரிக்கச் செய்யும்.

> ''யாழ்ப்பாணப் பொது மக்களில் 27 வீதத்தினர் உளவடுக்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர்'' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் உதயனில் வெளியான கட்டுரையின் இரண்டாவது (இறுதிப்) பகுதி இதுவாகும். தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையை முகவரியாகக் கொண்டு செயற்படும் உள நல சங்கத்தினர் தேசியஉள நல வாரத்தை உளநலம் குறித்து விழிப்புணர்வு ஊட்டும் வாரமாக அனுஷ்டிக்கின்றனர்.

பதகளிப்பு, மனஇறுக்கம், நெருக்கீடு பிற்பட்ட உளவடு நிலை (PTSD) போன்றவற்றிற்கு மசாஜ் (Massage) மிகவும் பயனுள்ளது. மசாஜ் ஆனது நோபட்ட இடங்களில் கவனம் எடுத்தாலும் அச் செய்கையினால் ஏற்படும் தளர் நிலையும் நம்பிக்கை உருவாகலும் பயனுள்ள விளைவாகும். எமது கலாசாரத்திலுள்ள ஆயுள்வேத, சித்த எண்ணெய் மசாஜ் முறையும் நல்ல பலனைத் தரக்கூடியது. சாந்த வழி முறைகள், மசாஜ், யோகாசனம் என்பவை சித்திரவதையினால் பாதிக்கப்பட்டோருக்குப் பயனுள்ள சிகிச்சை முறைகளாகும்.

எமது கலாசாரத்திலுள்ள இத்தகைய செயன்முறைகளை சாந்த முறைகள் என்று கூறிக்கொள்வது இவற்றைக் குறைத்து மதிப்பிட வழி சமைக்கலாம். இத்தகைய செயன்முறைகள் எமது கலாசாரத்துக்கு பரிச்சயமாக இருப்பதால் இவை சமூக சமய அடித்தளங்களைத் தொட்டு பயனுள்ள ஒருங்கிணைப்பை வெளிப்படுத்தி சிகிச்சையில் பயனுள்ள விளைவுகளைத் தருகின்றன. மேலும் தியானமானது எமக்குள் மறைந்து கிடக்கும் சக்திகளை மீட்டெடுத்து பயன்பாட்டுக்குக்கொண்டு வருவதுடன் எமக்கு நடந்தவற்றுக்கான அர்த்தத்தையும் தருகின்றது. இத்தகைய செயன் முறைகள் நியம உள சிகிச்சையை நேரடியாகச் செயற்படுத்துவதில்லை. ஆனாலும் நியம உள சிகிச்சை எய்த முனைபவற்றை இவை நமது கலாசார ஆன்மீக முறைகளினூடாக எய்துகின்றன. கல்வித திணைக்கள பாடவிதானத்தினூடாகவோ, சமுதாய நிறுவனங்களினூடாகவோ யோகாசனத்தை மக்களுக்கு பயிற்றுவித்தல் உளநல குறைபாடுகளைத் தடுப்பதற்கும், உள வளத்தை மேம்படுத்த உதவும்.

## புனர் வாழ்வு

ஒருங்கிணைந்த சிகிச்சை முறையில் புனருத்தாரண நடவடிக்கைகளும் முக்கியமான அம்சமாகும். அகதிகள், விதவைகள், பாலியல் வன்முறைக்கு உட்பட்டவர்கள், சித்திரவதைக்குட்பட்டவர்கள் என்போருக்கு நன்கு திட்டமிடப்பட்ட புனருத்தாரண நடவடிக்கைகள் இன்றியமையாதவைகள். உணவு, உறைவிடம், கடன் வழங்குதல், தொழில் பயிற்சிகள், வருமானம் ஈட்டக்கூடிய செயற்திட்டங்கள் என்பன கவனிக்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

பாதிக்கப்பட்ட தனி நபரினதும் சமூகத்தினதும் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டால் அவர்களிடம் தன்னம்பிக்கை எதிர்காலத்தைப் பற்றிய நம்பிக்கை, சுயமதிப்பு, செயற்படும் ஆர்வம் என்பன உருவாகும். தலைமை ஏற்று நடத்தல், முடிவெடுத்தல் போன்றவற்றில் பாதிக்கப்பட்டோருக்குச் சந்தர்ப்பம் அளித்தாலே அவர்கள் புற உதவிகளில் தங்கியிருக்கும் நிலைகளிலிருந்து விடுபடுவர்.

பாதிக்கப்பட்ட தனிநபர்கள், குடும்பங்கள், சமூகம் என்பவற்றின் புனருத்தாரண நடவடிக்கைகளில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் பெரும் பங்காற்றி வருகின்றது. அடிப்படை சமூக திறன்களையும் சில கைவினைகளையும் தனிநபர்கள் கற்றிருப்பது அவர்கள் தொழில் பெறுவதற்கும், சமூகத்துடன் மீள் இணைவதற்கும் உதவி செய்யும்.

ஆண்களுக்கு தச்சுவேலை, மேசன்வேலை போன்றனவும், பெண்களுக்கு தையல், நெசவு போன்றனவும் பயனுள்ள கைவினைச் செயற்பாடுகளாகும். மேலும் தொழில் பயிற்சியின் மூலம் தமது நேரத்தையும் சக்தியையும் பயனுள்ள வழியில் ஈடுபடுத்துவதானது அவர்களுக்குத் தம்மிடம் சுயமதிப்பையும், பயனுள்ள உணர்வையும் ஏற்படுத்தும். மேலும் இவர்கள் மனதளவில் பாதிக்கப்பட்டிருப்பதால் இவர்கள் பயிற்சி பெறும் சூழல் போட்டியும் அழுத்தமும் அற்றிருப்பது நன்று.

## மன அமைதியே மண்ணின் அமைதி

தற்போதைய மனப்பாதிப்புகளை முடிவுக்குக் கொண்டு வரப் போரை நிறுத்துவதே மிகப் பயனுள்ளதும், கடினமானதுமான செயலாகும்.

முடிவுகள் எடுப்பதிலும், தீர்வுகள் காண்பதிலும் நாம் பலவீனமானவர்களாகவும், கையறு நிலையில் இருப்பவர்களாகவும் உணரலாம். எப்படியாயினும் நாம் சிறிய முயற்சிகளை எடுக்கலாம். நாம் வெறுமனே இராது எமது வாழ்வை எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கலாம்.

நடந்து கொண்டிருப்பவற்றில் பங்கெடுத்துக் கொள்ள நாம் முயற்சி எடுக்கலாம். கடைசியாகப் பார்த்தால் போரும் அமைதியும் எமது மனதின் நிலைகளே. எமது இதயத்திலும் மனதிலும் அமைதி ஏற்படும் பொழுது எமது மண்ணிலும் அமைதி ஏற்படும். ★

பேராசிரியர் தயா சோமசுந்தரம்
தலைவர், உள மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக் கழகம்.

சண்டிலிப்பாய்
பிரதேச செயலக நலன்புரிச்சங்க
10 - 10 - 97 ஆம் திகதிய
அதிர்ஷ்டலாபச்சீட்டு முடிவுகள்

பரிசு பெறும் சீட்டு இலக்கங்கள்

1 ஆம் பரிசு — 7949
2 ஆம் பரிசு — 4414
3 ஆம் பரிசு — 2158

ஆறுதற் பரிசு இலக்கங்கள்; 4011, 3938, 1703, 8536, 3826, 0988, 7126, 3337, 1393, 8509

மேற்படி சங்கத்தின் அதிர்ஷ்டலாபச்சீட்டினை சிறப்பாக நடத்த ஒத்துழைப்பும் ஆதரவும் அன்பளிப்பும் தந்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

குறிப்பு: பரிசுக்குரியவர்கள் தாங்கள் பெற்ற அதிர்ஷ்டலாபச்சீட்டுடன் 30 - 10 - 97 ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

சி. சிவகுமாரன் — தலைவர்
செல்வி க. நளாயினி — பொருளாளர்
க. தணிகாசலம் — செயலாளர்
(50520)

## ஆத்ம சாந்தி பிரார்த்தனை

போயா தினமான இன்று புதன்கிழமை காலை 11.00 மணிக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் விசேட பூஜையும் அன்னதான நிகழ்வும் நடைபெற உள்ளன.

சைவசமய சீலரும் சிவபக்தருமான அ. நாகரத்தினம் (குகன்), ஜெ. ஜெயக்குமார் ஆகியோரின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனையும் நடைபெறவுள்ளது. (ஐ-9)

## சைக்கிள் திருட்டு

திருநெல்வேலி சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த வியாபாரி ஒருவரின் பூட்டிய நிலையில் இருந்த புதிய லுமாலா சைக்கிள் கடந்த வெள்ளியன்று திருடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி சந்தைப் பகுதியில் சைக்கிள்கள் காணாமல் போவது கடந்த சில நாள்களாக அதிகரித்திருப்பதாகவும் சைக்கிள்களை வீதியோரத்தில் வைப்பதைத் தவிர்த்து சைக்கிள் பாதுகாப்பு இடத்தில் வைக்கு மாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-17)

பாராட்டு விழா

திரு. நாகலிங்கம் ஜெயரஞ்சிதன் அவர்கள்

யாழ். மாவட்ட சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டமையைப் பாராட்டிச் சங்கரத்தை சமூகசேவா மன்றங்கள் எடுக்கும் பாராட்டு விழா.

இடம்: சின்னம்மா வித்தியாசாலை, சங்கரத்தை.

காலம்: 15 - 10 - 97 புதன்கிழமை
பிற்பகல் 1.00 மணி (பழையநேரம்)

தலைவர்: திரு. கு. சிவனேஸ்வரன் (ஆசிரியர்)

பிரதம விருந்தினர்: திரு. கா. சந்திரராசா (பிரதேச செயலர், சங்கானை)

சிறப்புவிருந்தினர்: திரு ந. சிவபாதம்(புத்தொளி) (ஓய்வு பெற்ற அதிபர்)

பல சமூகசேவா மன்றங்கள் சார்பில் பல பிரமுகர்கள் வாழ்த்துரை வழங்குவார்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சமூக சேவா மன்றத்தினர்,
சங்கரத்தை.

(50529)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பிறிமா கைலையின் பிறவுண், வெள்ளை பேட்டுக் கோழிக் குஞ்சுகள் 17-10-97 அன்று ஒருநாள் குஞ்சும், 29-10-97 அன்று ஒரு மாதக் குஞ்சும் விற்பனைக்குண்டு. முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும். தொடர்பு:- சே. கிருஷ்ணகுமார், சண்டிலிப்பாய் வீதி, மானிப்பாய் (பிப்பிலி சந்திக்கு முன்பாக) அல்லது கண்ணா வீடியோ சென்ரர், உடுவில். [50498]

மிகநல்ல நிலையில் உள்ள ஸ்ரீராம் ஹொண்டா 650, ஜெனரேற்றர் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: N.K. குகநேசர், அரச வீதி, (மாடி வீடு) உரும்பிராய் கிழக்கு, (பார்வையிடும் நேரம்மாலை 4 - 6) [50521]

பிறிமா, பிறவுண் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மற்றும் அழகான வளர்ப்பு மீன்களும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மல்லிகாபதி சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். [50534]

## தவறிவிட்டன

சிவலிங்கம் பூபதி என்பவருடைய 277240025V இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை கொட்டடி வீதிக்கும், கலட்டி பிறவுண் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். திரு. M. இராசரத்தினம், இணுவில் தெற்கு, இணுவில், சுன்னாகம். [50499]

நேசமணி நடராசா என்பவரது 407061691V இலக்கம் கொண்ட தேசிய அடையாள அட்டை மற்றும் முக்கிய ஆவணங்கள் என்பனவற்றுடன் பேர்ஸ் யாழ். நகர் பஸ் நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். நேசமணி நடராசா, 76/60, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம், (சன்மானம் வழங்கப்படும்). [50533]

## வேலை ஆள் தேவை

மட்டுவிலில் வசிக்கும் வயோதிபர்கள் இருவரை வீட்டில் தங்கிநின்று பராமரிக்க ஆள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். சம்பளம் நேரில் தீர்மானிக்கப்படும். தொடர்பு: ம. சண்முகலிங்கம், நுணாவில் சந்தி, சாவகச்சேரி. [50380]

## திருவாசக முற்றோதல்

தென்மராட்சி, ஒக். 15

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தின் 26 ஆவது திருவாசக முற்றோதல் வைபவம் இன்று புதன்கிழமை காலை 6.00 மணி முதல் சாவகச்சேரி சப்பச்சி மாவடிப் பிள்ளையார் கோயிலில் நடைபெறும். (இ-117)

## சாவகச்சேரியில் மீன் விலை உயர்வு

தென்மராட்சி, ஒக். 15

சாவகச்சேரிப் பகுதியில் மீன் விலை திடீரென அதிகரித்துள்ளது.

யாழ். குருநகர் கடலில் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லாததால் இப்பகுதியில் மீனுக்கு அதிக கிராக்கி நிலவுகிறது.

சந்தைக்கு கொண்டு வரப்படும் மீன், வியாபாரிகளால் எடுத்துச் செல்லப்படுவதால் பொதுமக்கள் மீன் வாங்க முடியாது சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

(இ-117)

# கண்ணீர் அஞ்சலி

பேராயர் அமரர்

## கலாநிதி டி. ஜே. அம்பலவாணர்

அவர்கள்

தமிழினம் தனது நல்லாயனையும், திருச்சபை தன் தலைவனையும் இழந்து கண்ணீர் சொரிகின்றது.

இடம் பெயர்வு, அகதி வாழ்வு நெருக்கடி சூழ் நிலையிலும் துன்புற்ற மக்களுடன் இணைந்து வாழ்ந்து, வசதிகளை நோக்கிச் செல்லாது உத்தர வாதத்துடன் தன் அழைப்பை நோக்கி தனித்துவமான திருப்பணி புரிந்த அதி உயர் மதிப்புக்குரிய பேராயர் D. J அம்பலவாணர் அவர்களின் மறைவு திருச்சபைக்கு மட்டுமல்ல தமிழினத்துக்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

இறை அடிகளாரின் மறைவினால் கலங்கி துயருறும் பேராயரின் மனைவி, மக்களுக்கும், தென் இந்திய திருச்சபையின் யாழ். அத்தியட்சாதீனத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

இலங்கை மெதடிஸ்த திருப்பேரவைத் தலைவர்
இலங்கை மெதடிஸ்த குரு மண்டலம்
பருத்தித்துறை - கட்டைவேலி
மெதடிஸ்த சேகர குருவானவர்கள்,
உறுப்பினர்கள்,

மெதடிஸ்த திருச்சபை,
கட்டைவேலி,
கரவெட்டி. (50512)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 14 — 08 — 1914 | 15 — 10 — 1996 |



## திருமதி மார்கிறற் அதிசயம் பெல்போர்


''சிறுமைப் பட்டவனுக்கு கர்த்தர் அடைக்கலமானவர்; நெருக்கப்படுகிற காலங்களில் அவரே தஞ்சமானவர்.''
சங்.—9: 9ஆம் வசனம்:

என்றும் உங்கள்
நினைவில் வாழும் அன்புள்ளங்கள்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

16 கண்டி வீதி,
சாவகச்சேரி. (50502)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 22 — 06 — 1924 | 23 — 09 — 1991 |



## அமரர் S. R. பொன்னம்பலம்

(ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்)
கோவிலாக்கண்டி

திதி: 15-10-1997

ஆத்மா கிருஷ்ணன் திருவடியில்
சாந்தி பெறுவதாக.
ஓம் சாந்தி!

மனைவி

மீசாலை கிழக்கு. (50522)

# தெல்லிப்பழை சு. வை. அ. பணிமனை நலன்புரிச்சங்கத்தினால் 10 - 10 - 97 இல் நிகழ்த்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில்

## பரிசுபெற்ற இலக்கங்கள்

1 ஆம் பரிசு – 0243 2 ஆம் பரிசு – 0414
3 ஆம் பரிசு - 1483

ஆறுதல் பரிசுக்கான இலக்கங்கள்:

| | | |
|---|---|---|
| 01) 1824 | 02) 1024 | 03) 4648 |
| 04) 4483 | 05) 2210 | 06) 0573 |
| 07) 0506 | 08) 1887 | 09) 2616 |
| 10) 2726 | | |

[50513] நலன்புரிச் சங்கம்.

# அஞ்சலி

அமரர்

## பெரியதம்பி கந்தையா பாலசிங்கம்

[முன்னாள் ஆசிரிய ஆலோசகர்,
பாடநூல் எழுத்தாளர்]

படித்தவனாயிருந்தும் படியாதவனென்றாய்
பணிவுடையோய் நல்ல பண்புடையோய்
முடிவில்லாத் தூக்கத்தில் ஆழ்ந்துவிட்டாய்-ஆனாலும்
முடியுமா உன் பிரிவைத் தாங்கிடத்தான் ஐயா!

இ. சங்கர்

பாரதி பதிப்பகம்
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். [50530]

# கண்ணீர் அஞ்சலி

பேராயர் அருள்மிகு

## கலாநிதி D. J. அம்பலவாணர்

''மார்க்கம் தனையறிந்த மட்டிலாச் சுடர்மணியே!
தீர்க்கமாகத் தேவ பணி செய்து முடித்தவரே!
நேயரே! அநாதைச் சிறாரின் துன்பம் துடைத்தவரே!
பேராயரே! எங்கள் தூயரே! ஆண்டகை
அம்பலவாணரே!
ஆடுகள் நாங்கள் இங்கு, அழுது புலம்புகின்றோம்
பாடுகள் போதுமென்றோ? பரமனுமை
அழைத்தாரையா?''

துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**வை. எம். சி. ஏ.
பண்டத்தரிப்பு**

(50504)

# கண்ணீர் அஞ்சலி

## கலாநிதி D. J. அம்பலவாணர்

அவர்களின் திடீர் மறைவையிட்டு அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**போஷகர், நிர்வாக உறுப்பினர்கள்
உடுவில்மத்தி, சனசமூக நிலையம்.**

(50532)

# இதய அஞ்சலி

அமரர்

## அருள்மிகு கலாநிதி D. J. அம்பலவாணர்

அவதியுற்ற வேளையில் அடைக்கலம் தந்து,
மானிப்பாய், கிறீன் மெமோறியல்
வைத்தியசாலையில்
எமது சேவையைத் தொடர்வதற்கு வசதிகள்
ஏற்படுத்தித்தந்த
தென் இந்தியதிருச்சபையின் யாழ். அத்தியட்சாதீன
முன்னாள் பேராயர் அதிவணக்கத்திற்குரிய
கலாநிதி D. J. அம்பலவாணர் அவர்களின்
மறைவு குறித்து ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து,
நன்றியுணர்வுடனான
எமது இதய அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

மாவட்டவைத்திய அதிகாரியும்,
அலுவலர்களும்.

**மாவட்டவைத்தியசாலை,
தெல்லிப்பளை.**

**கிறீன்மெமோறியல் வைத்தியசாலை,
மானிப்பாய்.** (50518)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## அத்திவாரம் இன்றி கட்டடமா?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு தான் முன்வைத்துள்ள யோசனைகளுக்கு, ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி.) தெரிவித்துள்ள திருத்தங்களை அரசு கவனத்தில் கொள்ளாவிடில்—

அந்தக் கட்சி தனது சொந்த மாற்றுத் - திட்டத்தை நாடாளுமன்றத்தில் தனிநபர் பிரேரணையாகச் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக வடக்கு - கிழக்கு இணைந்தவாறு இருக்க வேண்டும், தமிழர் தாயகத்தைப் பிரிப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடத்தக் கூடாது என்ற பிரஸ்தாப கட்சியின் நிலைப்பாட்டை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என்ற பின்னணியிலேயே—

அந்தக் கட்சிக்கு இத்தகைய எண்ணம் தோன்றியிருக்க வேண்டும் என்று ஊகிக்கலாம்.

வடக்கும் - கிழக்கும் ஒன்றுபட்டதான — தமிழர் தாயகத்தை உள்ளடக்கிய— ஒரு சமஷ்டி முறையிலான, அல்லது கூட்டாட்சி முறையிலான தீர்வையே தாம் வலியுறுத்துவதாக ஈ.பி.டி, பி. கட்சி வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

ஆனால் அரசின் அதிகாரப் பரவல் திட்டம் அந்த வகையில் அமையுமா என்பதில் பிரஸ்தாப கட்சிக்குச் சந்தேகம் வந்துவிட்டதாகத் தோன்றுகிறது.

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான மிக அடிப்படையான தேவை இணைந்திருக்கும் வடக்கு- கிழக்கை தமிழர் தாயகத்தை— பிரிக்கா திருப்பதே ஆகும். ஆனால் அரசு இது விடயத்தில் தந்திரமாக நடந்து கொள்ளத் தலைப்படுகிறது.

வடக்கு — கிழக்கு தமிழர் தாயமாக அங்கிகரிக்கப்பட வேண்டும். என்பது தமிழர் இன்று நேற்று முன் வைத்த கோரிக்கை அல்ல. இன்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன்னரே இதனைத் தமது பிரதான அரசியல் அபிலாசையாகத் தமிழர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

அத்தகைய ஒரு முக்கிய விடயத்தை இப்போது பரீட்சிக்க நினைப்பது எந்த வகையிலும் பொருத்தமாகாது; நியாயமுமில்லை. மேலும் இப்பத்தியில் நாம் ஏற்கனவே குறிப்பிடப்பட்டது போல, வடக்கு -கிழக்கு தமிழர் தாயகம் என்பதனை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் இனப் பிரச்சினையைப் தீர்ப்பதற்கு தென்னிலங்கையின் தலைவர்கள் மூவர்— பிரதமர்கள் மூவர் — எஸ். டபிள் யு. ஆர்.டி பண்டாரநாயக்கா, டட்லி சேனநாயக்கா, சிறிமாவோ பண்டாரநாயக்கா ஆகியோர் — முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர்.

மேலும் 1987 ஆம் ஆண்டின் இலங்கை — இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தமிழர் தாயகம் செயல் ரீதியாக அங்கீகரிக்கப்பட்டு விட்டது. இப்போது பத்து வருடங்களின் பின்னர் இது குறித்து இன்றைய அரசு தளம்புவது, தமிழர்கள் தமிழ் ஜனநாயகவழியில், சமாதான வழியில், அரசியல் முறையில் பெற முடியாது என்ற துரதிர்ஷ்ட நிலையே உண்டாக்குகிறது.

தமிழர் தாயக விடயத்தில் அரசாங்கக்கட்சி தளம்புவது, ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் தெற்கின் தீவிரவாத சக்திகளுக்கு அது அஞ்சுகிறது, அடிபணிய முற்படுகிறது, தலைசாய்க்க விரும்புகிறது என்பதனையே பிரதிபலிக்கிறது.

தமிழர் பிரச்சினை சமஷ்டி முறையிலோ, கூட்டாட்சி முறையிலோ, எந்த வகையில் தீர்க்கப்படுவதானாலும், தமிழர் தாயகமே அதற்கானஅத்திவாரமாக இருக்கவேண்டும். இதுவே தமிழர்களின் நிலைப்பாடு.

அத்திவாரம் இல்லாமல் கட்டடம் நிறுவ முடியுமா? என்ன?

---

'றாகிங்' குற்றச்சாட்டு:

# 146 மாணவர்கள் இடைநிறுத்தம்!

## வவுனியா கல்விக் கல்லூரியில்

வவுனியா, ஒக். 15

வவுனியா கல்விக் கல்லூரியில் இடம்பெற்ற '' றாகிங்'' தொடர்பாகக் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு மாணவர்கள் 146 பேரையும் இன்று முதல் ஒரு மாத காலத்துக்கு விரிவுரைகளில் இருந்து இடைநிறுத்தி வைப்பதெனக் கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது.

கல்விக் கல்லூரியின் புதிய மாணவர்களை 'றாகிங்' செய்ததாகக் கிடைத்த முறைப்பாட்டையடுத்துகல்வி அமைச்சைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் வவுனியா வந்து விசாரணைகள் நடத்தினர். அதன் பின்னர் கல்விக் கல்லூரிகளுக்குப் பொறுப்பான ஆணையாளர் நிஹால் ஹேரத்திடம் சில சிபார்சுகள் அடங்கிய அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தனர்.

மோசமாக 'றாகிங்' செய்தது, விரிவுரையாளர்களை மதிக்காதது ஆகிய விடயங்கள் குறித்து அந்த அறிக்கையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்ததாகவும் —

அதையடுத்தே கல்வி அமைச்சு மேற்படி முடிவை எடுத்ததாகவும் — தெரியவந்தது.

இந்த 146 மாணவர்களும் அடுத்த மாதம் 16 ஆம் திகதி தமது பெற்றோர்களுடன் கல்லூரிக்குச் சமுகமளித்து தமது தவறுகளுக்காக மன்னிப்புக் கோரினால் மீண்டும் வகுப்புகளுக்குச் சமுகமளிக்கலாம் என்று வவுனியா கல்விக் கல்லூரி பீடாதிபதி செ. அழகரத்தினம் தெரிவித்தார்.

## நாவாந்துறையில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஒக். 15

நாவாந்துறையில் நேற்று காலை 10-30 மணிக்குஇடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் உயிரிழந்ததாகத் தெரிவித்து இனந் தெரியாத ஒருவரின் சடலம் நேற்று இராணுவத்தினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சுமார் 55 வயது மதிக்கத்தக்க இந்நபரின் சடலம் அடையாளம் காணும் பொருட்டு ஆஸ்பத்திரிபிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (உ-15)

## நாய்களுக்கு தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். மாநகர சபைப் பகுதியில் வளர்ப்பு நாய்களுக்கு ஏ. ஆர். வி. தடுப்பூசி மருந்து போடும் திட்டத்தின் கீழ் நாளை காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரை பாண்டியன்தாழ்வு சந்தன மாதா கோயிலடியிலும், 11 மணிமுதல் மாலை 3 மணி வரை ஈச்சமோட்டை மாநகர சபை சுகாதார பொறியியல் பணிமனையிலும் தடுப்பூசி ஏற்றப்படும்.

நாளை மறுதினம் வெள்ளி காலை 8.30 மணி முதல் 10.30 மணிவரை நல்லூர் நாவலர் மண்டபத்திலும், 11 மணி முதல் மாலை 3.00 மணிவரை கந்தர்மடம் அரசடி வீதி பழைய சிகிச்சை நிலையத்திலும் (டியூட்டரி அருகாமையில்) தடுப்பூசி போடப்படும். (உ-15)

## சமய சந்நிதியில்

அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் தீர்த்தத் திருவிழா இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும். (உ-30)

★ ★ ★

கொழும்புத்துறை மணலியம்பதி அருள்மிகு ஸ்ரீ அம்மன் ஐயனார் கோயிலில் இன்று மாலை 4.30 மணிக்கு திருவிளக்கு சுமங்கலிப் பூசை மற்றும் வழிபாடுகள் நடைபெறும். (உ-30)

## இன்று

வடமராட்சி லயன்ஸ் கழக ஏற்பாட்டில் விழிப்புனரற்றோர் ஊர்வலமும், பொதுக் கூட்டமும் இன்று காலை லயன்ஸ் கழகத் தலைவர் ஆ. சிவசுவாமி தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

★ ★ ★

யாழ். பாங்சால் வீதியில் உள்ள அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு 'தொடர்புகளின் ஊடக உறவு' என்ற பொருளில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது. அருட்திரு. பிரான்சிஸ் டானியல் அடிகளும், அருட்திரு, எஸ். ஜே. இராஜநாயகமும் கருத்துரை வழங்குவர்.

பத்திரிகையாளர் படுகொலை!

## அடையாள அணிவகுப்பு ஒத்திவைக்கப்பட்டது

கொழும்பு, ஒக். 15

கொழும்பு மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று நடைபெறவிருந்த— பத்திரியாளர் ரிச்சார்ட் டி சொஸ்ஸா படுகொலை தொடர்பான — அடையாள அணிவகுப்பு பிற்போடப்பட்டது.

பிரதான சாட்சியும் ரிச்சார்ட் டி சொஸ்ஸாவின் தாயாருமான மனோகரி சரவணமுத்து சுகவீனம் காரணமாக நீதிமன்றத்தில் ஆஜராகாததன் காரணமாகவே அணிவகுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த அடையாள அணிவகுப்பில் இரு பொலீஸ் உத்தியோகத்தர்களும், இளைப்பாறிய பொலீஸ் அத்தியட்சகர் ஒருவரும் நிறுத்தப்படவிருந்தார்கள் என்று இரகசியப் பொலீஸைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் தயாரத்தின நீதிமன்றத்தில் தெரிவித்தார்

மூன்று சந்தேகநபர்களையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் புஞ்சிஹேவ உத்தரவிட்டார்.

(உ-3)

## நாளை

**புரட்டாதி 30**

வியாழக்கிழமை

திதி: பூரணை முற்பகல் 9.49 வரை.

நட்சத்திரம்: ரேவதி நண்பகல் 12.06 வரை.

பூரணை விரதம்

சுபநேரம்: 7.32-9.02

ராகுகாலம்: 1.32-3.02

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

# 5 வயதுச் சிறுவனின் கன்னம் துளைத்த துப்பாக்கி ரவை!

## கொடிகாமம் பகுதியில் சம்பவம்

கொடிகாமம் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் விளையாடிக் கொண்டிருந்த ஐந்து வயதுச் சிறுவனின் கன்னத்தைத் துப்பாக்கி ரவை துளைத்துச் சென்றது.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த கொடிகாமம் கோயிலாமனையைச் சேர்ந்த கார்த்திகேசு சுஜீவன் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அம்புலன்ஸ் மூலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்டார்.

சம்பவநேரம் வீதிப் பாதுகாப்பில் நின்றோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகவும்—

அதனையடுத்து சுமார் 15 நிமிட நேரம் பரவலாப் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகவும் தெரிவிக்சுப்பட்டது. (ஐ-117)

# லொறிச் சாரதிகள் ஐவரும் விடுவிப்பு

வவுனியா, ஒக். 15

வவுனியாவிலிருந்து புதுக்குடியிருப்பு நோக்கி கடந்த 5 ஆம் திகதி நிவாரணப் பொருள்களுடன் சென்ற சமயம் தடுத்து வைக்கப்பட்ட ஐந்து லொறிகளின் சாரதிகளும், ஒரு லொறியின் கிளினரும் படையினரால் வவுனியா பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த ஆறு பேரும் நேற்று வவுனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் நீதிவான் அவர்களை விடுதலை செய்தார்.

அவர்கள் தற்சமயம் வவுனியா 'குட்செட்' நலன் புரி நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

5 லொறிகளும் படையினர் வசமே தொடர்ந்தும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## மீசாலையில் சடலம்

கைகள் கட்டப்பட்ட நிலையில் இளைஞர் ஒருவரின் சடலம் மீசாலை ஐயா கடை சந்தியில் மழையில் நனைந்தபடி நேற்றுக் காலை கிடக்கக் காணப்பட்டது.

கொடிகாமம் கச்சாய் வீதியைச் சேர்ந்த — மெக்கானிக்கான — இராஜசேகரம் பரமநாதன் (வயது 26) என்ற — இரு பிள்ளைகளின் தந்தையாரின் — சடலமே அது என உறவினர்களால் அடையாளம் காட்டப்பட்டது.

நேற்று முன்தினமிரவு 9 மணியளவில் இப்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-15-31-117)

தோட்டங்கள் ஊடாகச் செல்லும்

# பாதுகாப்பு அரண்களை அகற்ற நடவடிக்கை

உரும்பிராய் அன்னுங்கை பகுதித் தோட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பு அரண்கள் அகற்றப்படுகின்றன.

உரும்பிராயில் இருந்து கோண்டாவில் வரை தோட்டக் காணி ஊடாக இந்த பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டிருந்தன.

பாதுகாப்புஅரண்கள் அகற்றப்பட்டதும் இப்பகுதிகளில் மீண்டும் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (இ-86)

# ரூபா 25 லட்சம் செலவில் புதிய மாடிக்கட்டடம்

## மந்திகை ஆஸ்பத்திரியில்

வடமராட்சி, ஒக். 15

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் 25 லட்சம் ரூபா செலவில் சிகிச்சை (கிளினிக்) பிரிவு மாடிக்கட்டடம் ஒன்று விரைவில் கட்டப்படவுள்ளது.

வைத்தியசாலையின் சத்திர சிகிச்சைப் பிரிவுக்கு அருகில் கட்டப்படவுள்ள இம் மாடிக் கட்டடத்துக்கான நிதியை பிராந்திய சுகாதாரத் திணைக்களம் ஒதுக்கியுள்ளது. (இ-173)

# போர்த் தவிர்ப்பு வேளை படையினர் தாக்கினர்!

## புலிகள் தரப்பு குற்றச்சாட்டு

வவுனியா, ஒக். 15

போலியோ தடுப்புசொட்டு மருந்து வழங்குவதையொட்டி கடந்த 10ஆம், 11ஆம் திகதிகளில் தாங்கள் தாக்குதல் தவிர்ப்பை அனுஷ்டித்தபோது, படையினர் மக்கள் குடியிருப்புக்கள் மீது ஷெல் வீச்சுக்களை மேற்கொண்டதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

மனிதாபிமான அடிப்படையில் அவ்விரு நாள்களிலும் தமது அமைப்பு அமைதி காத்ததாகவும்—

ஆனால் படையினர் தாக்குதலை நடத்தியதாகவும் — புலிகள் தெரிவித்துள்ளனர்.

# தீர்வுத் திட்டத்தை விளக்கும் கருத்தரங்கு கொழும்பில்!

அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து மாகாணசபை ஆளுநர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு விளக்குவதற்கான கருத்தரங்கு ஒன்று இன்று கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

ஜனாதிபதிசந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் அதிகாரப் பரவலாக்கல் அலகு மற்றும் பொலீஸ், காணி, நிதி ஆகிய விடயங்கள் தொடர்பான பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் என்பன குறித்து விளக்கம் அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-21-3)

Digitized by Noolaham Foundation, noolaham.org | aavanaham.org

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)
பெனடிக் தனபாலசிங்கம் உட்பட புளொட் அமைப்பு உறுப்பினர்களும் இந்த உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர்.

மட்டக்களப்பு மேயர் செழியன் பேரின்பநாயகம் பிற்பகல் 4 மணிக்கு பழரசம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் தேசிய அமைப்பாளர் ஆர். துரைரத்தினம் தலைமையில் இந்த உண்ணாவிரதம் இடம்பெற்றது. (உ-21-3)

# தண்ணீர் விநியோக கட்டுப்பாட்டால் ஆஸ்பத்திரியில் சுகாதாரச் சீர்கேடு

யாழ்ப்பாணம், ஒக். 15
யாழ். போதனா வைத்தியசாலையில் தற்போது நிலவும் தண்ணீர் விநியோகம் மட்டுப் படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்து வருவதால் நோயாளர் தங்கி சிகிச்சை பெறும் வார்ட்டுகளில் பெரும் சுகாதாரச் சீர்கேடு நிலவுகிறது.

வைத்தியசாலையில் 24 மணி நேர மின்சார வசதியிருந்தும் இன்னும் தண்ணீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளது.

காலை 5-30 மணியில் இருந்து 9-30 மணி வரையும், நண்பகல் 12-00 மணியில் இருந்து 1-30 மணி வரையும், இரவு 6 மணியில் இருந்து 10 மணி வரையுமே தண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சில வேளைகளில் இந்த விநியோக நேரங்களில் தடங்கல் ஏற்பட்டு தண்ணீர் விநியோகம் தடைப்படுவது உண்டு.

மட்டுப்படுத்தப்பட்டுள்ள தண்ணீர் விநியோகத்தால் வார்ட்டுகளில் உள்ள மலசல கூடங்களில் துர்நாற்றம் வீசுகிறது. தொற்றுநோய் பரவும் அபாயம் நிலவுகிறது. என்று கூறப்படுகிறது. (இ)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சிவராசா

(ஓய்வு பெற்ற பிரதம எழுது வினைஞர், சுகாதாரத் திணைக்களம், தெல்லிப்பழை)

மாவிட்டபுரம், பழைவீமன்காமத்தை பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை வெளிச்ச வீட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிவராசா 14-10-97 செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.30 மணிக்கு கொக்குவில் கிழக்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா திருமதி க. தங்கமுத்து ஆகியோரின் அன்பு மகனும், திருமதி சி. பத்மாவின் அன்புக் கணவரும் இ. வக்சலா (கனடா), ஸ். மேகலா (ஆசிரியர் - பன்னாலை சேர். கனகசபை அ. த. க. பாடசாலை), நிமலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அ. இராஜேந்திரன் (கனடா), இ. ஸ்கந்தகுமார் (உதயன் பணிமனை) ஆகியோரின் அன்பு மாமனாரும், இ. நிலக்ஷன் (கனடா), இ. நிஜன் (கனடா), ஸ். லஜீனருபிகா ஆகியோரின் அன்புப்பேரனும், நடராசா (ஓய்வு பெற்ற அதிபர், வீமன்காமம்), காலஞ்சென்றவர்களான திருமதி ந. நவமணி (குகன் அச்சகம் தெல்லிப்பழை), திருமதி தா. சிவமணி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), திருமதி சி. இராசமணி மற்றும் க. தேவராசா (மட்டக்களப்பு), சி. தேவமணி (சண்டிலிப்பாய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிறீஸ்கந்தராசா (கொழும்பு) காலஞ்சென்றவர்களான காட்விக்ரர், திருமதி அ. தனலஷ்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-10-1997 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நந்தாவில் லேன், கொக்குவில் கிழக்கில் உள்ள அவரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

தகவல்:
இ. ஸ்கந்தகுமார்
(மருமகன்)

C/O. கே. ஜெகதீஸ்வரன்,
நந்தாவில் லேன்,
கொக்குவில் கிழக்கு.

(சி/1773)

## P. K. பாலசிங்கம்

(படியாதவன்) சிவலிங்கப்புளியடி

வண்ணார்பண்ணை சிவலிங்கப்புளியடியைப் பூர்விகமாகவும், பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவரான பெரியதம்பி கந்தையா பாலசிங்கம் (இளைப்பாறிய முதன்மை ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர் (விஞ்ஞானம்), பாடவிதான அபிவிருத்தி நிலையம், கொழும்பு, கல்வி அமைச்சின் முன்னாள் விஞ்ஞான பாடநூல் எழுத்தாளர், உரும்பிராய் இந்துக் கல்லூரி, வெலிகம அரபா ம. ம. வி., யாழ். மத்திய கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியர்) 12-10-97 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா-செல்லமுத்து தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும், சிவபதிமலரின் அன்புக் கணவரும், பாலஸங்கர் (ஆள்பதிவுத்திணைக்களம், கச்சேரி, யாழ்ப்பாணம்), பாலமயூரகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், பிரபாளினியின் பாசமிகு மாமனாரும், குமாரகுலசிங்கம் (இளைப்பாறிய ஓவசியர், நீர்ப்பாசனத்திணைக்களம், முருங்கன்), செல்வி யோகேஸ்வரி கந்தையா (பிரதி அதிபர், யாழ். இந்து மகளிர் கல்லூரி, விரிவுரையாளர், மகரகம தேசிய கல்வி நிறுவக பட்டப்பின் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறி) திருமதி இராஜேஸ்வரி சுந்தரநடராஜன் (முன்னாள் பிரதி அதிபர், பரந்தன் ம. ம. வி., முஸ்லிம் ம. வி., வவுனியா), திருமதி இரத்தினேஸ்வரி ஜெயபாலன் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), ஆகியோரின் பாசமிகு சகோதரனும், திருமதி தவமணிகுமாரகுலசிங்கம், N. சுந்தரநடராஜன் (அதிபர், கணேசபுரம் விநாயக வித்தியாலயம், வவுனியா) காலஞ்சென்ற R. ஜெயபாலன் (நிர்வாக உத்தியோகத்தர், நெற்சந்தைப்படுத்தும் சபை, கிளிநொச்சி-யாழ்ப்பாண மாவட்டம்) சிவஞானகுரு சிவலிங்கம், சிவபாலன் (பிரதம சிறாப்பர், யாழ். மாநகர சபை) ஆகியோரின் மைத்துனரும், ஜே. சாந்திபூசன் (பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி, கொழும்பு) மேனகா சாந்தி ஜெயபாலன் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), யனித்தாசாந்தி ஜெயபாலன் (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு). துதிப்பிரியா சுந்தரநடராஜன் (கன்னியர்மடம் பாடசாலை, வவுனியா), பிரியலக்ஷனா சுந்தரநடராஜன் (கன்னியர் மடம் பாடசாலை, வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று 15-10-97 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு (பழைய நேரம்) இலக்கம் 718, ''விதானை சங்கரியாவளவு'' காங்கேசன்துறை வீதி, இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
P. K. B. பாலஸங்கர்
P. K. B. பாலமயூரகன்
(பிள்ளைகள்)

விதானை சங்கரியா வளவு,
718, கே. கே. எஸ். வீதி,
சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம்.

(C/1770)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)
'யுத்தத்தை எதிர்க்கும் சிங்கள - தமிழ் மக்கள் சிங்கள ஆணைக்குழுவின் அறிக்கையை நிராகரிக்கின்றனர்''

''யுத்தத்தில் கொல்லப்படுவது உங்கள் பிள்ளைகளா? எங்கள் பிள்ளைகளே!''

''இனவாதப் பிக்குமாருக்கு புரியுமா பிள்ளைப் பாசம்?''

''இனவாத சக்திகளை முளையில் கிள்ள வேண்டும்''

''வடக்கு - கிழக்கு அலகு 50 ஆண்டுகால தமிழர்களின் கோரிக்கை''

''கிழக்கில் மட்டும் ஏன் சர்வஜன வாக்கெடுப்பு?''

''காணி, காணிப்பகிர்வு பிராந்திய அரசுகளுக்கே!''

''வடக்கு-கிழக்கு இணைப்புக்கு உத்தரவாதம் வேண்டும்''

மேற்கண்ட சுலோகங்களை பேரணியில் சென்றவர்கள் கோஷித்துச் சென்றனர்.

பேரணி முடிவில் பெற்றோலிய நிலைய சந்தியில் கூட்டம் இடம் பெற்றது.

முஸ்லிம் காங்கிரஸ் முக்கியஸ்தரும், வவுனியா நகர சபை உறுப்பினருமான எம். ஆர். ஆரிப், ஈ. பி.ஆர். எல். எவ். செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன், வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் வை. பாலச்சந்திரன், ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் வவுனியா மாவட்ட செயலாளர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் உரையாற்றினர்

சுரேஷ்பிரேமச்சந்திரன் தலைமையில் விசேட குழு அரச அதிபர் கே. கணேஷிடம் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றைக் கையளித்தது. (உ-21-3)

## மட்டுநகர்...

(முதலாம் பக்கத் தொடர்)
மையகத்துக்கு அருகில் அமைந்துள்ள மட்டக்களப்பு செயலகம் மீது வீழ்ந்த ஷெல்களினால் காவலாளி உட்பட இருவர் காயம் அடைந்தனர்.

அங்கு நிறுத்தப்பட்டிருந்த 6 வாகனங்கள் சேதமடைந்தன.

இந்தத் தாக்குதலால் மட்டுநகர் விமானத்தளத்தின் ஓடுபாதைக்கும் சிறு சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை — விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு — வாழைச்சேனை வீதியில் உள்ள மாவடிவேம்பு இராணுவ முகாம் மீதும் மோட்டார் தாக்குதலை நடத்தினர்.

இதில் இரு இராணுவத்தினர் காயமடைந்தனர். (உ-21-3)

## வன்னிக்குச்...

(முதலாம் பக்கத் தொடர்)
களைச் சேர்ந்த முஸ்லிம்கள் உட்பட 50 பேரே இடமாற்ற உத்தரவை ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளனர்.

இடமாற்றம் பெற்றுள்ளவர்களில் ஒரு சாரார் மட்டக்களப்பு மாவட்ட ஐ. தே. க. [illegible] செய்யது அலிசாகீர் மௌலானவை சந்தித்து தமது பிரச்சினைகள் குறித்து எடுத்துக் கூறினர். (உ-21-3)

## திருமலை - காங்கேசன் சேவை:

# பிரிட்டிஷ் கப்பலை பெறும் முயற்சி தோல்வி!

திருகோணமலை, ஒக். 15
திருகோணமலைக்கும், காங்கேசன்துறைக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடுத்த சிங்கப்பூரில் இருந்து கப்பல் ஒன்றைப் பெறுவதற்கு வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சேவையில் ஈடுபடுத்துவதற்காக ''தாலியா'' என்ற பிரிட்டிஷ் கப்பலை வாடகைக்கு அமர்த்த முயற்சி எடுக்கப்பட்டது என்றும் —

அக்கப்பலைச் சேவையில் ஈடுபடுத்த தினமும் 10 ஆயிரம் அமெரிக்க டொலர் வாடகைக் கட்டணம் கோரப்பட்டதாகவும் —

இதனால் அந்தக் கப்பலை வாடகைக்கு அமர்த்தும் முயற்சி கைவிடப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதைத் தொடர்ந்து சிங்கப்பூர் கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் —

அடுத்த நான்கு நாள்களில் இது தொடர்பான விவரம் அறிவிக்கப்படும் என்றும் —

வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை தெரிவித்துள்ளதாக திருகோணமலை பட்டணமும், சூழலும் பிரிவு பிரதேச செயலர் வி. வேலும்மயிலும் குறிப்பிட்டார். (உ-3)

## யாழ். நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்)
மண்ணெண்ணெய் கடை உரிமையாளர்களான கொட்டடி ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த இரட்ணசபாபதி சுப்பிரமணியம் (வயது47) நீர்வேலியைச் சேர்ந்த நவரட்ணசிங்கம் சுதாகரன் (வயது 21) ஆகியோரே படுகாயமடைந்தனர். இவர்களில் சுதாகரனின் வலதுகால் முழங்காலுக்கு கீழ் துண்டிக்கப்பட்டது.

காயமுற்ற இரு சிவிலியன்களும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இராணுவச் சிப்பாய், யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து பலாலி இராணுவ ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டார்.

கடைவாசலில் இராணுவம் டிராக்டரை நிறுத்திய பின்னர் டிராக்டரில் இருந்து குதித்த இராணுவச் சிப்பாயின் கிரனேட் கீழே விழுந்து வெடித்ததாக தெரிய வருகிறது. (உ-15)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15
தென்மராட்சிக் கல்விக் கோட்ட அனுசரணையுடன் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடத்தும் ஐ. நா. தினப் பொது அறிவுப் போட்டி, முன்பு அறிவித்தபடி நாளை மறுதினம் நடைபெறமாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டி எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்னர் அறிவிக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறும். (உ-3)

## ஆலயங்கள் புனரமைப்பு

கொழும்பு, ஒக். 15
வடக்கில் யுத்தம் காரணமாக சேதமடைந்த ஆலயங்களைப் புனரமைக்க வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜனாதிபதியின் பணிப்புரையின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இப்புனரமைப்புத் திட்டம் தொடர்பாக யாழ். மாவட்டத்தில் உள்ள ஆலய தர்மகர்த்தாக்களுடன் பேச்சு நடத்த அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு விரைவில் வரவிருக்கிறது. (ஐ-21-3)

## ஆத்ம சாந்திக்காக வேண்டுகின்றோம்

### திருமதி பாக்கியம் முருகேசு

(முன்னாள் அதிபர், மங்கையர்க்கரசி வித்தியாலயம்)

எமது பாடசாலையில் 01-09-65 தொடக்கம் 19-04-76 வரை அதிபராக நற்பணிகள் புரிந்த திருமதி பாக்கியம் முருகேசு அவர்களின் சீரிய சேவைகளை நினைவுகூர்ந்து அவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை.**

(50550)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15 - 10 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org